# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௯ | மலர் |
| --- | --- | --- |
| ௩௪ | விளம்பி, சித்திரை<br>1958 ஏப்ரல், மே. | க |


## பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை நினைவு மலர்.

பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை

"அம்மே! நின் சுவைக்கடலில் ஆழ்ந்துமனேன் மணியம்நுவல்
எம். ஏ. சுந் தர மால் நின் இசை விளக்க வருமகவே!"

தமிழ் மொழியில் ஆராத காதல் உடையவராய், பல வழியாலும் தமிழின் உயரிய பண்புகள் மேம்படற்கும், அதன் பண்டைய தூய நிலையினை உலகம் அறிந்து பயன்பெறுவதற்கும், தொண்டாற்றிய பெரியோர்களுள் இன்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, முதல் அணியில் முதல் வராக வைத்துக் கருதத் தக்கவராவர். இந்திய நாட்டின் பண்டைய வரலாறு, காவிரிக் கரையிலிருந்து தொடங்கினலன்றி, கங்கைக் கரையிலிருந்து தொடங்கினல் தன் உண்மையை உள்ளவாறு காட்ட வியலாது என்னும் நோக்கம் நம் பேராசிரியரது ஆராய்ச்சித் திறனாலேயே, வரலாற்று ஆசிரியர்களிடம் ஒருவாறு தலைகாட்டத் தொடங்கியது. தமிழ் இலக்கியத்தை, காலத்தை ஒட்டிப் புதிய முறையில் திருப்புவதற்கும்; காய்தல் உவத்தலின்றி, கிடைக்கும் சான்றுகள் எல்லாவற்றையும் தக்க முறையில் சீர்தூக்கிப் பார்த்து, ஆசிரியர்கள் அரசர்கள் முதலியவர்கள் வாழ்ந்த காலத்தைத் தெளிவாகக் காண்பதற்கும்; இதுகாறும் கிடைத்துள்ள அறிவியல் கருத்துக்களை ஒரு வகையாகத் தொகுத்து, யாவரும் எளிதில் அறியும் வண்ணம் தமிழ் மொழியில் நூல் எழுதுவதற்கும்; மேல்நாட்டுத் தத்துவமுறைகளையும், கருத்துக்களையும், நம் நாட்டுத் தத்துவ முறைகளோடும் கருத்துக்களோடும், பிணைத்தும் இணைத்தும், இவ் இரண்டு முறைகளும் மக்கள் இனத்துக்குத் தக்க பயன் அளிக்குமாறு செய்வதற்கும்; நம்மவருக்கு வழிகாட்டியவர், நம் பேராசிரியப் பெருந்தகையாரேயாவார். இவரது உண்மைத் தொண்டின் பயனாக, தமிழகத்தில்—அறிவு உலகத்திலேயே—புது ஊக்கம் பிறந்தது. தமிழ் மக்களும், தமிழ் மொழியின் உயர்ந்த பண்பையும், தனி நிலையையும், செம்மை சால் சிறப்பினையும் நன்குணர்ந்து, தம் தாய்மொழியைப் போற்றும் பணியில் ஈடுபடுவாராயினர். காலவாராய்ச்சி என்பது, கருத்துக்கு இனிமை தரக் கணக்கிடுவது ஒன்று அன்று என்பதையும், பலவகையான சான்றுகளை நுணுகி ஆய்ந்து முடிவுகாணும் கடப்பாடுடையது என்பதையும், நம்மவர் நன்குணர்ந்து, அவ்வழியையே பின்பற்றுவா

ராயினர். பேராசிரியர் அளித்த ஊக்கம் அக்காலத்துத் தமிழறிஞர்களிடையும் மாணவர்களிடையும் பேரார்வத்தைத் தோற்றுவதாயிற்று. இந்த நூற்றுண்டின் முற்பகுதியில், கல்லூரியிலாயினும் சரி, உணவு விடுதிகளிலாயினும் சரி, சென்னையிலாயினும் சரி, அனந்தையிலாயினும்சரி, நான்கு தமிழ் மாணவர்கள் கூடி இரண்டு நாழிகை உரையாடுவாராயின், அரை நாழிகையேனும், நம் பேராசிரியரைப் பற்றிக் கனிவுடனும், பெருமிதத்துடனும், நன்றியுடனும், பேசாதிரார். இவ்வாறு தமிழகம் முழுவதும் பரந்த இலக்கியக் கிளர்ச்சியே, நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்கும் அடிப்படையாக விளங்கியது.

சென்ற நூற்றுண்டின் இடைப் பகுதியில், ஆங்கில ஆட்சி நன்கு வேரூன்றிவிட்டபடியால, பொருள் வருவாயும், அரசாங்க அலுவல்களும், ஏனைய பொதுச் சிறப்புகளும், அவற்றான் ஆய பயனும், ஆங்கிலக் கல்வியுடையவர்களுக்கே உரிமையாயிற்று. நீதி மன்றங்கள், மருத்துவச் சாலைகள், சிற்பம், பொறிவலாண்மை முதலிய அறிவியற்றுறை அலுவல்களும், ஆங்கிலக் கல்வியுடையார்க்கன்றி, பிறருக்குப் புகவியலாவாயின. இந்த நிலையில், நாட்டில் தொன்றுதொட்டுவந்த தமிழ்க் கல்வி, போற்றுவாரின்றி, சிறுகச் சிறுகக் குறைவதாயிற்று; சமய வளர்ச்சிக்கென அமைந்த நிலையங்களிலும், குறுநில மன்னர், பெருநிலக் கிழவர் முதலியவர்களுடைய ஆதரவிலும், ஒருவாறு ஒதுங்கி உயிர்தாங்கிக் கொண்டிருந்தது. கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் ஒருவாறு ஒட்டிக்கொண்டிருந்ததென்று கூறலாம். போதிய பொருள் வருவாயும், உலகியற் சிறப்பும் இன்மையால், பழைய முறையான கல்வியைப் பயில்வார் தொகை குறைவதாயிற்று. சுருங்கச் சொல்வோமானல், பழைய முறைக் கல்வி, பயில்வாரற்று மறையவும், புதுமுறைக் கல்வி, பயிற்சி வேட்கையால் நிறையவும் நின்ற காலம் என்று கூறலாம். நம் பேராசிரியர் தோன்றிய காலத்தின் நிலை இத்தகையது. உண்மையான பற்றுதல் இருந்தாலொழிய, தமிழைப் போற்றுவதென்பது இயலாததாயிற்று. நம் பேராசிரியரோ, உலகப் போக்கில் செல்லாது, இத்தகைய, இடைப்பட்டதும் இடர்ப்பட்டதுமான காலத்தில் தோன்றிய வீரர்களை ஒப்ப, பழைய முறையையும் புதிய முறையையும் ஒருசேரப் பயின்று, முன்னையதில் உறுதியை விடாமலும், பின்னையதின் ஆற்றலைப் புறக்கணியாமலும், கால நிலைக்கும் மக்களது முன்னேற்றத்திற்கும் ஏற்ப இரண்டின் நன்மைகளையும் ஒன்றுபடுத்தித் தன் தாய் மொழியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினர். இவருடைய உள்ளத் தோற்றத்தில், தமிழ்மொழி பலவழியாலும் முன்னேறுவதாகத் தோன்றியது. இத் தோற்றம் உண்மையானதே. ஆனல் போற்றத்தக்க நிலையிலும், காலத்தின் வளர்ச்சிக்கேற்பவும், இத் தகைய கலைச் சூழலில் ஏனைய நாடுகளிலும், காலங்களிலும், ஏனைய மொழிகள் பெற்ற வளர்ச்சியோடு ஒப்பிடக்கூடிய அளவிலும் முன்னேறவில்லை. உண்மை அன்பர்களுடைய உள்ளத்தில், உலகம் எல்லாம் பணி செய்வதாகவும், தாம் ஒன்றும் செய்யாமலிருப்பது போலவும் தோன்றுவது, எல்லாத் துறைகளிலும், நாடுகளிலும்

காணக்கூடிய ஒரு தன்மையாகும். நம் பேராசிரியர் பலர் தமிழ்த் தாய்க்குச் சிறந்த தொண்டுகள் செய்ய, தான் வாளாவிருத்தல் முறையன்று என எண்ணினர். தன் எளிய தொண்டும் ஏற்றுக் கொள்ளப் பெறுமோ என ஐயுற்றார்; எவ்வாருயினும் 'ஏற்றருள்க' என, தமிழ்த் தாயை வேண்டினர். இவ்வாறு வேண்டும் சில அடிகள் ஆழ்ந்து, கனிவுடன் சிந்திப்போருக்கு, வற்ருத அமுதவூற்ருய், எத்தனையோ உயரிய கருத்துக்களைத் தோற்றித் தமிழ்த் தொண்டில் ஊக்குவனவாகும்.

"நிற்புகழ்ந் தேத்துநின் நெடுந்தகை மைந்தர்
பற்பலர் நின் பெரும் பழம் பணி புதுக்கியும்,
பொற்புடை நாற்கவிப் புதுப்பணி குயிற்றியும்,
நிற்பவர், நிற்க; நீ பெறும் புதல்வரில்
அடியேன், கடையேன்; அறியாச் சிறியேன்;
கொடு மலையாளக் குடியிருப்பு உடையேன்;
ஆயினும் நீயே தாய் எனும் தன்மையின்,
மேய பேராசை, என் மீக்கொள, ஓர் வழி
உழைத்தலே தகுதி என்று இழைத்த இந்நாடகம்
வெள்ளியது எனினும், விளங்கு நின் கணைக்காற்கு,
ஒள்ளிய சிறுவிரல் அணியாக்
கொண்மதி—அன்பே குறி எனக் குறித்தே.

இத் தேன் துளிகள், ஒவ்வொரு துளியாகச் சுவைத்துப் பயன் பெறத்தக்கன; இத் தேன் துளிகளைத் துளிக்கும் தெய்வத் தாமரை மலரையும், அம்மலரை மலர்விக்கும் இளஞாயிற்றின் எழில்மிகு தோற்றத்தையும் நம் உள்ளக் கண்ணுல் உருவகப்படுத்திக்காண, எழும் உவகை உலப்பிலதாகும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, சேர நாட்டில், (முன் திருவாங் கூர்ப் பகுதி) ஆலப்புழை என்னும் துறைமுகப் பட்டினத்தில், கி. பி. 1855ல் வேளாளர் வகுப்பில், பெருமாள் பிள்ளை என்பவருடைய மகனுகப் பிறந்தார். சைவ சமயத்தைச் சார்ந்த வேளாளராகலின், இவருடைய தந்தையார், இவருக்கு இளமையிலேயே, சைவத்திரு முறைகளையும், இலக்கியங்களையும், தக்க ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவித்தார். வீட்டின் பழக்க வழக்கங்களும் சைவ சமய நெறி களை ஒட்டியே அமைந்துள்ளமையால், இளமையிலேயே நம் பேரா சிரியருக்குத் தெய்வ வழிபாடும், அதனுலேற்படும் பல சிறந்த பண்பு களும் இயற்கைக் குணமாகிவிட்டது. இவருடைய கல்லூரிப் படிப்பு எல்லாம் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் நிறைவேறியது. 1876ல் சென்னைப் பல்கலைக் கழகத்தாருடைய பி. ஏ. பட்டத் தேர் வில், திருவனந்தபுரம் மாணவர்களுள் முதல்வராயும், பல்கலைக் கழகத்தில் நான்காமவராகவும் தேறினர். பி. ஏ. பட்டம் பெற்ற வுடனேயே தான் பயின்ற கல்லூரிலேயே ஆசிரியராக அமர்ந்து பணியாற்றினர். 1877ல் இவருடைய திறனையும், நற்பண்புகளையும்

கண்ட கல்விப் பகுதித் தலைவருடைய எண்ணப்படி இவர், அப்போது திருநெல்வேலியில் உயர்தரப் பள்ளிக்கூட நிலையிலிருந்ததும், பின்னர் இந்து கல்லூரி எனச் சிறந்து எழுந்ததும், இப்போது மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி என வழங்குவதுமான கல்வி நிலையத்தின் தலைமை ஆசிரியராக அமர்த்தப் பெற்றார். இவருடைய தொண்டின் பயனாக, அவ் உயர்நிலைப் பள்ளி, இவருடைய ஆட்சியிலேயே கல்லூரியாக உயர்ந்துவிட்டது 1879ல், இவருடைய பேராசிரியராக இருந்த அறிஞர், ஹார்வி என்பவர், சிலகாலம் ஓய்வு எடுத்துக்கொண்டு, தன் தாய்நாட்டிற்குச் சென்றபொழுது, அவருடைய இடத்தில் பேராசிரியராக, நம், பிள்ளை அமர்த்தப் பெற்றார். 1880ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் எம். ஏ. பட்டத்தையும் பெற்றார்.

இவர் 1882ல், திருவாங்கூர் அரசாட்சியில், தண்டற் பகுதியில் ஆணையாளராக நியமனம்பெற்றார். உலகியலில், முன்னேறுவதற்குப் பல வாய்ப்புக்கள் உள்ளதும், செல்வாக்கு உடையதுமான, அந்த வேலையில் அவர் உள்ளம் செல்லவில்லை. மறுமுறையும் 1885ல், தான், முன்பார்த்துவந்த பேராசிரியர் வேலைக்கே தன் கல்லூரிக்குத் திரும்பினார்; பின்னர், தன் வாழ்நாள் முழுவதும், மாணவரும், அறிவுத் துறையும், நாடும், மகிழ்ந்து முன்னேறி வளம்பெறும் வண்ணம், பேராசிரியராகவே அமர்ந்து பணிசெய்வாராயினர்.

இவருடைய பலதிறப்பட்ட ஆராய்ச்சிகளையும், அவற்றின் சிறப்புகளையும், நம் நாட்டினும், அயல் நாட்டினும் உள்ள அறிஞர்கள் பாராட்டினார்கள். ஒரு ஜெர்மன் பல்கலைக் கழகம், இவருக்கு 'அறிஞர்' (Ph. D.) என்னும் பட்டம் வழங்க முன்வந்தது; அக்கழக விதிகளின்படி, அக்கழகச் சிறப்பினைப் பெறுவோர், கழக எல்லையுள் சிலகாலமாவது உறையவேண்டியிருந்தபடியால், அச் சிறப்பினை ஏற்றுக்கொள்ளவியலாது போயிற்று. சென்னை மாநில ஆட்சித் தலைவராக இருந்த கிரான்ட் டப் (Sir M.E. Grant Duff) என்பவரின் நற்சான்றினால், இவர் 'அரச, வரலாற்றுச் சங்கத்தின்' அறிஞருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 'அரச ஆசியச் சங்க'த்தின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பினருள் ஒருவராகவும், தத்துவம், தமிழ், வரலாறு முதலிய பாடப் பகுதிகளுக்குத் தேர்வாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1896ல் இந்திய அரசாங்கத்தார் (பிரிட்டிஷ்) இவருடைய வரலாற்றுப் புலமையை வியந்து 'இராய் பஹதூர்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இவ்வளவு சீரும் சிறப்பும் பெற முன்னேறிவந்த நம் பேராசிரியர், தமிழ் நாட்டிற்கும், மொழிக்கும் நல்வினையின்மையின், மிக இளம் பருவத்திலேயே, அதாவது, தனது நாற்பத்திரண்டாவது வயதில், 1897 ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 26 ஆம் நாள்

நீரழிவு நோயுற்ற தன் உடலிற் பிளவை தோன்ற, இந்நிலவுலகத்தை விட்டு, அந்தமில் இன்பத்து அழிவில் வீடு அடைந்து, தன் நிலைத்த நூல்களாலும், ஆராய்ச்சிகளாலும் இறவாப் புகழ் எய்தி, தன் கருத்துக்களால் தமிழகத்துக்கும், மொழிக்கும், தொண்டு செய்வாராயினர்.

நம் பேராசிரியர், இளமையில், தனித்து அமர்ந்து ஏதேனும் சிந்தனையிலாழ்ந்து இருப்பார் என்றும், இவரோடு பள்ளி பயிலும் மற்ற இளைஞர்கள், இவர், தங்களோடு கூடி, விளையாட்டு, நகைச் சுவைப் பேச்சு முதலியவைகளில் கலந்துகொள்ளாமலிருப்பதற்காக எப்பொழுதும் இவரை ஏளனம் செய்வார்கள் என்றும், இவரும், அவர்களுடைய எள்ளலுக்கு அஞ்சி, ஆசிரியர் வரும் வரை வகுப்பு அறையுள் நுழையாது, பள்ளிக்கூட எல்லைக்குள் உள்ள மரத்தடியில் தனியாக நின்றுகொண்டிருந்து, ஆசிரியர் வகுப்பறையில் நுழைந்தவுடன் வருவார் என்றும், இவர் சிறிது பருத்த உடலம் உடையவராக இருந்தமையால், உடன் மாணவர்கள் ஏளனம் செய்கின்றார்கள் எனக் கருதிக் கொண்டிருந்ததாயும், இவருடன் இளமையில் கல்வி பயின்ற ஒருவர் கூறக் கேட்டிருக்கின்றேன். எவருடனும் பேசுவதற்கும் கூசுவாராம்; உடன் மாணவர்களும் இவரைப் பலவாறு ஏளனம் செய்து நகைப்பார்களாம். அவரைப் பற்றி விளையாட்டாகப் பல கதைகளைக் கூறுவார்களாம். இத் துன்பங்களனைத்தையும் பொறுத்துக்கொண்டிருந்திருக்கிறார்.

இவர் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும், பேராசிரியராகவும், இருந்த நாட்களில் எவருடனும் இனிமையாகவும், பணிவாகவும், பழகும் இயல்புடையவர் என்றும், தமிழறிஞர்கள், புலவர்கள், வடமொழிப் புலவர்கள் முதலியவர்களிடம் மிகுந்த பற்று உடையவரென்றும, அவர்கள் தன்னிடம் வரும்போது, எழுந்து நின்றே பேசுவார் என்றும், விடைபெறும்போது மிகவும் வணக்கமுடையவராகக் கைகூப்புவார் என்றும், இவருடைய மாணக்கர் ஒருவர் கூறக் கேட்டிருக்கின்றேன். கல்லூரியில் பாடம் நடத்தும் போது, நின்றுகொண்டே பேசுவாராம்; சில சமயம், மேசையின் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு பேசத் தொடங்குவாராம். இவ்வாறு உட்காருவது என்பது பிற்பகல் வகுப்புக்களில்தான் நேருமாம். இவ்வாறு காலை மடக்கி, மேசையில் உட்கார்ந்து பேசத் தொடங்கிய சில நிமிஷங்களில் கண்ணையும் மூடிக்கொள்வாராம். இந்த நிலையைக் கல்லூரித் தலைவர் தெரிந்துகொண்டால், எல்லா மாணவர்களையும், ஆசிரியர்களையும் இவருடைய வகுப்புக்கு வரும்படி செய்துவிட்டுத் தானும் வந்து மாணவர்களோடு மாணவனாய் உட்கார்ந்துவிடுவாராம். பேராசிரியர் கண்ணை மூடிக்கொண்டு, பேசத்தொடங்கிய பேச்சு மூன்று மணிப் பொழுதுக்குக் குறையாமல் போய்க்கொண்டிருக்குமாம். அப்போது எவ்வித அரவமுமின்றி அனைவரும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்பார்களாம். மாலை ஆறு மணி அளவில் கண்ணைச் சிறிது திறந்து, 'என் பாடநாழிகை நெருங்குகிறது' என்று

சொல்லும்போது, மாணவர் கூட்டத்தைக் கண்டு திடுக்கிடுவாராம். மேஜையை விட்டு விரைவாக இறங்க முயலுவாராம். உடல் எல்லாம் வியர்வை தோன்ற, அருகிலுள்ளவர்கள் துணையினுல் கீழ் இறங்கி "அடுத்த ஆசிரியர் நாழிகையிலும் புகுந்துவிட்டேனே" என அச்சத்துடன் கேட்பாராம். பின்னர் கல்லூரித் தலைவர் அவரைக் கையைப் பிடித்து அழைத்துச் செல்லுவாராம். இத்தகைய நிகழ்ச்சி ஆண்டில் ஒருமுறை அல்லது ஈராண்டில் ஒருமுறை நிகழுமாம். என்னிடம் இச் செய்தியைத் தெரிவித்தவர், 'என் வாழ்நாளில், இனி ஒருநாள், அந்தச் சொற்பொழிவைக் கேட்கக் கூடுமானுல், எனக்கு உரியவை எல்லாம் விலையாகக் கொடுத்துக் கேட்பேன்' எனக் கண்ணீர் ததும்பக் கூறினுர்.

இவருடைய இளமையில், தமிழ் இலக்கியத்தையும், சைவ நூல்களையும், சோழ நாட்டிலிருந்து திருவனந்தபுரம் வந்து தங்கியிருந்த ஓர் பெரியவரிடம் பயின்ருர் என்றும்; வேதாந்த நூல்களையும், வடமொழியில் காணக்கூடிய தத்துவ நுட்பங்களையும் கோடக நல்லூர் சுந்தரஸ்வாமிகள் என்னும் தெய்வத் தன்மையும், மக்களிடம் பரிவும் கொண்டிருந்த ஒரு ஞானியிடம் தெரிந்துகொண்டு, சில பயிற்சிகளையும் நேரிலேயே உணர்த்த உணர்ந்து பின்பற்றினுர் என்றும் கூறுகின்றனர்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் பெயரும் புகழும், என்றும் உள செந்தமிழ் இயங்கு நாளளவும் நிலவச் செய்வது அவர் இயற்றிய 'மனேன்மணீயம்' என்னும் நாடகக் காவியமேயாகும். இக் கவிதை, தமிழ் இலக்கியத்திலுள்ள சுடர் மணிகளுள் ஒன்று எனப் போற்றத் தக்கதாகும். எவரேனும், தமிழ் இலக்கியத்துள் ஒரு நூலைக் கற்றுப் பல செய்திகளைத் தெரிந்துகொள்ளுவதற்கோ, பல தூய உணர்ச்சிகள் எழுப்பப் பெற்று இன்பமும் பயனும் ஒருங்கே அடைவதற்கோ, தமிழ் மொழியின் சிறப்பையும், அமைதியின் எழிலையும் தெரிந்து மகிழ்வதற்கோ, எல்லாம் மறந்து இன்பப் பெருக்கில் முழுகுவதற்கோ, விரும்புவாராயின், அவருக்கு, மனேன்மணீயத்தினும் தகுதிவாய்ந்த மற்றெரு நூலைக் கூறவியலவில்லை. இவ்வளவு சிறிய நூலுள் எவ்வளவு பரந்த பண்புகள் காணக் கிடைக்கின்றன! தொன்று தொட்டு தொடர்ந்து வந்த தமிழ் மரபு மாசுபடாவண்ணமும், மாறுபடாவண்ணமும். காலக் கருத்துக்கள் எவ்வாறு இணைந்து மிளிர்கின்றன! மனேன்மணியைப் பற்றிக் கூறுமிடத்து

"அன்பே உயிராய் அழகே யாக்கையா
மன்பேர் உலகுசெய் மாதவ மதனுல்
மலைமகள் கருணையும் கலைமகள் உணர்வும்
கமலையின் எழிலும் அமைய ஓர் உருவாய்
பாண்டியன் தொல்குல மாகிய பாற்கடல்
கீண்டு எழு மதி என ஈண்டு அவதரித்த
மனேன்மணி யன்னையை வாழ்த்தார் யாரே"

என உரைப்பதிலுள்ள எளிமையும் அழகும் எத்தகையது!

'காலமென்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா
மாற்றிடுந் தோற்ற மென்பது மறந்தனை.
வினை தெரிந் தாற்றும் வேந்தன் முனமுனம்
ஆயற் பாற்ற தழிவும், அஃதொழி
வாயிலு மாமென வையகம் புகழும்".

இந்த அடிகளுள் எவ்வளவு சிறந்ததும் இன்றியமையாததுமான உண்மை எளிதாகக் கூறப்பட்டுள்ளது!

"புருடரே புலையர் நிலையிலாப் பதடிகள்
இருளடை நெஞ்சர் ஈரமில் உளத்தர்
ஆணையும் அவர்க்கொரு வீணுரை அறிந்தேன்
தந்நய மின்றிப் பின்னொன் றறியார்
காதகர் கடையர் கல்வியில் கசடர்"

இவ்வடிகள் ஆடவருள் ஒரு பகுதியினரையாவது, அவர்களுடைய இழிந்த நிலையில் காட்டிச் சீர்திருத்த வல்லனவல்லவா?

"கிழவரின் அழுகை சில வரு டந்தான்
நெடுநாள் நிற்கும் இளையவர் அழுகை"

"நேசமில் வதுவை நாசகா ரணமே"

"தாதா அன்பு போதா தாகும்
காலம் கன்னியர்க் குளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும்"

இவ் அடிகள் உலக வாழ்க்கையில் எவ்வளவு அடிப்படையான கருத்துக்களைத் தெரிவிக்கின்றன!.

மேல்நாட்டு, உரிமை இயக்கங்களால் தோன்றிய, இலக்கியங்களில் காணப்பெறும் நாட்டுப்பற்று, மொழிப்பற்று முதலிய அடிப்படைகளில் எழுந்த செய்யுள்களை ஒத்த பாக்களை, முதன் முதலாக நம் இலக்கியத்தில் காணக்கூடியது, இந்த நாடகத்திலேயாம். மக்களுக்கு உரிமை இன்றியமையாததென்பதையும். அதைப் பெறுவதற்காக அடையும் துன்பமெல்லாம், இன்பமும் புகழுமேயாம் என்பதையும்

"சுதந்தரம் அவர்க்குயிர்—சுவாசமற் றன்று
இத்தனிப் போரில் நீர் ஏற்றிடுங் காயம்
சித்தங் களித்து ஜயமா துமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை யாகி
எத்தனை தலைமுறைக்கு இலக்காய் நிற்கும்
போர்க்குறிக் காயமே புகழின் காயம்"

என்னும் அடிகள் எவ்வளவு அழகாய்த் தெரிவிக்கின்றன!

" உரிமைமேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்
பெருமையில் பிணத்தில் பிறந்ததோர் சீதம்;
அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானம் உள் மூட்டிய சினத்தீ
அன்றே வானவர்க்கு என்றுமே உவப்பு
வந்த இக் கயவர் நும் சிந்தையில் கொளுத்திய
வெந்தழற்கு அவரே இந்தனம் ஆகுக!
இன்றுநீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும்,
நின்று உகம் பலவும் நிகழ்த்துமே"

இவ்வடிகளில் காணும் வீரவுணர்ச்சியின் பெருமிதத்தை என்னென்று கூறுவது! எத்தனை தெளிவு! இலக்கியச் சுவைதான் என்ன!

பழம்பெருமையை நினைப்பூட்டி, உரிமையைக் காக்க உணர்ச்சியைத் தூண்டும்

" விந்தம் அடக்கினேன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரம்அறும் அற்பர்வாய்ப் படுமோ?

என்னும் விஞவின் பொருள் பொதிந்த வீரச்செறிவை எளிதில் பாராட்டவியலுமோ?

போருக்குப் படைகளைச் செலுத்தும்போது கூறும் வீரவுரைகளில் தமிழ் மொழியின் நடையே ஒரு பெருமிதம் கொள்கின்றது; கொடுமையும் கொதிக்கின்றது. சொற்கள் எளிமையாய் ஓடுகின்றன; கருத்துக்கள் கொடுமையைக் கொட்டுகின்றன;

'நம் தாய் தமர் நம் காதலர்
நம் சேய் பிறர் நந்தா வுறை
நம் தேயமேல் வந்தே நனி
நொந்தாழ் துயர் தந்தே இவண்
நிந்தா நெறி நின்ரு ரிவர்
தந்தா வளி சிந்தா விழ
அடிப்போம்; அடல் கெடுப்போம்; முகத்து
இடிப்போம்; குடல் எடுப்போம்; இடுப்பு
ஒடிப்போம்; வசை துடைப்போம்; உயிர்
குடிப்போம்; வழி தடுப்போம்; பழி
முடிப்போம்; இனி நடப்போம் நொடி'

இவ் அடிகள் போதிய எடுத்துக்காட்டல்லவா? வீரப் பாடல்களுக்கும் உரிமைப் பாடல்களுக்கும் நம் மொழியின் மறுமலர்ச்சியில் இவ் ஆசிரியரையே தந்தையாகவும் முதல்வராகவும் கொள்ளத் தடையுமுண்டோ?

இத்தகைய புதுமுறைச் செய்யுள்களோடு இடைக்காலச் செய்யுள் முறையையும் இனிமையாகக் கையாண்டிருப்பதை

‘ தந்நகர மேகாக்கச் சமைந்தெழுவோர் ஊதுமிந்தச்
சின்னம்அதி சயிக்கும் எமன்; செருக்கொழிமின் தெவ்வீர்காள்!
சின்னமதி! சயிக்கும் எம்மன் எனச் செருக்கி நிற்பீரேல்,
இன் உணவு இங்கு உமக்கு இனிமேல் எண்ணீரே எண்ணீரே’

என்னும் செய்யுள் எவ்வளவு பொருத்தமாகக் காட்டுகிறது!

சமய வேற்றுமைகள் நிலவியிருந்த காலத்திலும், நாட்டிலும், அவ்வேற்றுமைகள் ஒரு சிறிதும் இன்றி, நம் மொழியின் பண்டைய தெய்வப் பாக்களின் எதிரொலி போன்று, இந்நூலில் காணப்பெறும்

‘ நீர் நிலையின் முதலையின்வாய் நிலைகுலைந்த ஒரு கரிமுன்
ஓர்முறை உன் பெயர் விளிக்க வுதவினை வந் தெனவுரைப்பர்;
ஆர்துணையும் அறவிருக்கும் அறிவிலியான் அழைப்பதற்குன்
பேர்தெரியேன் ஆயிடினும் பிறகிடல் நின் பெருந்தகையோ!

மறலிவர மனம் பதறும் மார்க்கண்டன் உனது லிங்கக்
குறிதழுவி அழிவில் வரம் கொண்டான்முன் எனவுரைப்பர்;
வெறிகழுமிப் பொறியழியும் வெம்பாவி விரவுதற்குன்
நெறியறியேன் ஆயிடினும் நேர்நிற்றல் நினதருளே!

என்னும் செய்யுட்கள், மனம் தளர்ந்த காலத்து, வாயாரப்பாடி ஆறுதல் பெறக்கூடியனவல்லவா? இவ் எடுத்துக்காட்டுக்களைப் பார்க்கும்போதே, தமிழ் இலக்கியத்தின் பலவேறு காலங்களில் காணக்கூடிய பண்பெல்லாம் புத்துணர்ச்சியோடு இந்த ஒரு நூலிலேயே காணக் கிடைப்பது, சொல்லாமலேயே அமையும்.

இந் நாடகத்துள் காணப்பெறும் ‘சிவகாமி சரிதை’ என்னும் சிறுகதைச் செய்யுள், ஒரு தனிக் கவிதை; இது ஒரு காதற் பாட்டு; ஒரு ஞான நாடகம்; அல்ல; பொறிகள் அறியாது உள்ளே புகுந்து இனிக்கும் ஒரு தெய்வப் பேரிசை; ‘கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு, பெருந்தேன் இழைத்து’ அளிக்கும் ஒரு விருந்து; கற்றவர் உளத்து ஒரு கற்பகக் கனி. அளவால் சிறிய ஒரு நூலைப் பற்றி இவ்வளவு கூறுவது புனைந்துரையன்று. ஐம்பது ஆண்டு களுக்குமுன் என்னையும் என்போன்ற இளைஞர்களையும் தட்டி எழுப்பி எங்கள் உள்ளமாகிய தாமரையை மலர்விக்கும் இளஞாயிருய் விளங்கியது. இப்போது, முதுமை புகுந்த நாட்களில், மாலை மதிய மாக—இளங்கால் வீச—ஆறுதல் அளிக்கின்றது. என் அளவில் சொல்லவேண்டுமாயின், எனக்குப் பின்னல்வார்சடையானைப் பிதற்றிய காலம்போக, அடுத்து உளத்தில் எழுவது ‘சிவகாமி சரிதை’யே; இந்நூலைக் கற்றோரும் கற்போரும் இவ்வுரைகளைப் போலிப் புகழுரை எனத் தள்ளார் என்பதே என் எண்ணம்.

இந்நூலின் சிறந்த பகுதிகளுட் சில காட்டுவது என்னும் முயற்சி, கற்கண்டுக் குன்றில் இனிய இடம் காண்பது போலாகும். இது அறிவிலக்கியம்; ஆற்றலிலக்கியம்; இன்பவிலக்கியம்; தத்துவ இலக்கியம்; கருத்து, நடை, சொல், ஒலி என்பனவெல்லாம் அள

வோடு அமைந்து உள்ளத்தைத் தன்வயப்படுத்துவது. இந்நூல் எழுந்த காலத்து, அறிஞரெல்லாம் கொண்டாடிப் போற்றி வரவேற்றார்கள்; இதன் தமிழ்த் தெய்வ வணக்கத்தின் ஒவ்வொரு அடியையும், மொழிநூல், இலக்கிய வரலாறு, ஆராய்ச்சி முதலியவைகளின் சிறந்த பகுதிகளை நினைவூட்டும் கொளு எனப் புகழ்ந்து பயின்றார்கள். ஆனால், ஒரு சில அறிஞர்களும், புலவர்களும் அக்காலத்திலேயே. இந்நூலைக் குறைவாகவும் பேசினார்கள். இவ்வாறு, அவர்கள் மாறுபட்ட கருத்துடையரானதற்கு, இதில் காணும் பரந்த கருத்துக்களும், தமிழ் மொழியின் தனிமையை இவர் பாராட்டிய முறையுமேயாகும். சிலர் நூலினுள் புகுந்து பாராமலேயே குறை கூறினார்கள் என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. நம் பேராசிரியர் காலத்திலேயே சிறப்புற்றிருந்தவரும், சில ஆண்டுகள் நம் பேராசிரியரைவிட மூத்தவருமாகிய, ஒரு பெருந்தமிழ்ப்புலவரிடம், இந்நூலைப்பற்றி நான் புகழ்ந்து பேசியபோது, அப்பெரியார், என்னுடன் மாறுபட்ட கருத்துடையவராய் தான் இந்தப்பேராசிரியரையும், நூலையும் நேரிலேயே தெரிந்திருந்தபடியாலும், சிறந்த கவிஞரோடும், இலக்கியங்களோடும் பயிற்சி கொண்டிருந்தமையாலும், இப்பேராசிரியரைத் தமிழ்ப்புலவராகக் கொள்ளவும், இந்நூலை ஒரு இலக்கியமாக ஏற்கவும் இயலாதெனக் கூறினர். மறுநாள், அப்பெரியாருடைய தலைமையில் நான் பேச நேர்ந்தபொழுது, கடவுள் வணக்கமாக,

> "வேத சிகையும் விரிதலையும் மெய்யன்பர்
> போதமும் போய்த்தீண்டாப் பூரணமே — பேதமற
> வந்தெனை நீ கூடுங்கால் வாழ்த்துவர்யார் வாராக்கால்
> சிந்தனையான் செய்ம்முறையென் செப்பு."

என்னும் வெண்பாவைப் பாடினேன். தலைவராகவிருந்த பெரியார், மனம் கனிந்து, 'இத்தெய்வ வாக்கு யாருடையது? யாருடையது?' எனப் பேரார்வத்துடன் கேட்டார்; கருத்துக்களின் தெளிவையும், சொற்களின் இனிமையையும், வெண்பாவின் அமைப்பையும் பாராட்டி மகிழ்ந்து, இத்தகைய அருட்பாடல்களை யெல்லாம் போற்றித் தொகுக்க வேண்டும் என்றார். இந்த நிகழ்ச்சியினாலேயே, நூலுக்கு ஏற்பட்ட குறை, குறை கூறுவார் இதனை மனம் பதிய, நன்கு பயிலாக் குறையே அன்றி நூலிற்காணும் குறையல்லவென்பதைத் தெரிந்தேன். உடன்காலத்துப் புலவர்களுக்குள் வேறு மாறுபாடுகளாலும் ஒருவர் பெருமையை ஒருவர் அறியாது போதலும் உலக இயற்கையே. எவ்வாறாயினும், தமிழ்மக்கள் இந்நூலின் பெருமையை உணர்ந்துவிட்டார்கள். இனி, இந்நூலை மறக்கமாட்டார்கள்.

நம் பேராசிரியர், ஒரு நாடும், மொழியும் முன்னேறுவதற்கு அறிவுநூல்கள் இன்றியமையாவென உணர்ந்தார். அவ் அறிவு நூல்களையும், தனித்தனியாக ஒவ்வொருவர் அவரவர் தகுதிக்கேற்ப சிறப்பாகப் பயில்வதோடு, அவ் அறிவுநூல்களுள் ஒவ்வொன்றுக்கும் உள்ள தொடர்பையும், அவற்றின் தொகையையும் தோற்றத்தையும்

நன்குணர்ந்தாலன்றி, அவற்றால் பெறும்பயன் சீரியனவாக முடிவில் நிலையா என்பதையும் உணர்ந்தார். அறிவு நூல்கள் தமிழில் வருதற்கேற்பத் தமிழ்மொழி வளம்பெறவேண்டும் என்ற ஆர்வத் தால் 'நூற்றொகை விளக்கம்' என்ற ஒரு அரியநூல் 38 நூற்பாக் களால் இயற்றி அதற்கு அரிய உரையும் வகுத்து வெளியிட்டார். அவர் வகுத்த முறைப்படி ஒருவரும் அறிவு நூல்களைத் தமிழில் கொண்டுவர இன்றுவரை முயலவில்லை.

'திருவருளன்றித் தெரிவுநற்கரிய
ஒருவனை வணங்கியிங் கோதுவன்
விரிவுறு நூற்றொகை விளங்குநல் லியல்பே.'

'அறிவுபே ரறிவுசிற் றறிபுல னறிவென
மூவகை யதனுள் முறையே நூலும்
மதம் பொது கலையென வகைமூன் றாமே.'

'அணுவெனப் படுவது பிரிபடாப் பகுதி
மூலம் கலப்பென வாமிரு வகையே.'

என்பன அந்நூலின் நூற்பாக்களுட் சில.

உரை நடைக்கு எடுத்துக்காட்டாக, ஒரு சிறுபகுதி கீழே தரப் பட்டுள்ளது.

''ஆயினும் 'பத்தியாம் வலையிற்படும் பார்மிசை புத்தியாலறி யொண்ணுப் புராணனே' என்னுந் துணிபால் 'கடுந்தகையே னுண் ணுந் தெண்ணீரமுதப் பெருங்கடலே' என்று அருட்டாகங்கொண்டு 'தன்கடன்னடி யேனையுந் தாங்குதல்' என்றியாவும் கைவிட்டுத் தன்னையும் ஜகத்தையும் மறந்து 'அழுவதுவேயன்றி மற்றென் செய் வேன் பொன்னம்பலத்தரசே' என அழுதரற்றி மனங்கரைந்து நெக்கு நெக்குருகித் தம் எய்ப்பில் வைப்பாய் வரும் முழுமுதலின் பாதநிழலில் ஓய்வடையும் பத்தி மார்க்கத்திற்கும்''.

ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கட்டுரை எழுதியிருக்கிறார்; அவற்றுள் 'தமிழ் இலக்கியத்தில் சில எல்லைக் கற்கள்' என்ற தலைப் பில் தோன்றிய 'திருஞானசம்பந்தர் காலவாராய்ச்சி' என்னும் ஆங் கிலக் கட்டுரை, காலவாராய்ச்சி முறைக்கே ஒரு எல்லைக் கல்லாகும். தமிழ் இலக்கியத்தில் ஒரு முறையாக ஆராய்ந்து காலவரையறை செய்து நிறுவப்பெற்றுப் பிற்கால ஆராய்ச்சிகளாலும் பெரும் வேறு பாடின்றி ஒரே மனதாகக் கொள்ளப் பெறுவது, 'திருஞானசம்பந்தப் பெருமானார் காலமேயாகும்'. வரலாற்று நூலாரின் ஆராய்ச்சி முறைக்கு, இக் கட்டுரை எக்காலத்தும் எந்நாட்டவராலும் போற் றத்தக்கதெனக் கூறுவது பற்றால் எழுந்த உரை அல்ல.

பத்துப்பாட்டைப் பற்றி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக் கின்றார். ''திருவாங்கூர் முற்கால அரசர்கள்'' என ஒரு வரலாற்று நூல் எழுதியிருக்கின்றார்.

தமிழில் தனிப் பாடல்களாகவும், சிறு செய்யுள் நூல்களாகவும், நண்பர்களுடைய துன்பநிலை, இன்பநிலைகளைக் குறித்தும் பல செய்யுள்கள் எழுதியிருக்கின்றார். அவற்றுள், அக்காலத்திய திவான் இராமய்யங்கார் விருப்பத்தின்படி கிறிஸ்தவ சமயப் பெரியார் தெய்வ பவுல் தேசிகருடைய (St. Paul) கருத்துக்களைத் தழுவி ஆக்கிய செய்யுட்களில் சில எடுத்துக்காட்டாகக் கீழே தரப்பட்டுள்ளன.

பிறங்கும் பிறர்குறை பேணாது நற்குணம் பேணலுறும்
அறந்திகழ் நெஞ்சின ரன்றே லவர்விண் ணமிர் தினையும்
மறந்திடும் வண்ணம் வடித்துப்படிக்கின்ற வார்த்தையெல்லாம்
வெறுங்கல கல்லென்னும் வெங்கலவோசையின் வேறலவே.

வரும் பொருளுரைக்கும் வல்லபம் பெறிலென்
மண்ணிடை விண்ணிடை மறைந்த
பெருரகசியங்கள் யாவையு முணரும்
பெருமையும் ஞானமும் பெறிலென்
பருவத மெடுத்துப் பந்தென வாடும்
பத்தியுஞ் சித்தியும் பெறிலென்
பரவனு கூல திருட்டியென் றுரைக்கும்
பண்புறு மன்பிலை யெனிலே.

இல்லவர் யாரும் புசித்து நற்சுகமே
யெய் திடப் பொருளெலா மீந்தென்
நல்லமெய் தனையுஞ் சிபியெனத் தன்கோள்
நாட்டிட நல்கியு மென்னை
அல்லவர் தமையும் நல்லவ ரெனவே
யனுதின மதித்துகந் திடுமோர்
சொல்லிடும் பிரிய வன்புமற் றிலையேற்
சுகமிலை யென்பது துணிபே.

பிறர்க்கெலா மின்பம் பெருக்குவ தன்பே
பிறர்செயுந் தீங்கனைத் தினையும்
பொறுத்துமேன் மேலும் மகிழ்வது மன்பே
போற்றிய பிறர்வயி னுற்ற
சிறப்பது கண்டங் கழுக்கறு விடுத்துச்
சித்தமுட் களிப்பது மன்பே
அறச்சிறிதேனு மன்பு தன் பெருமை
யறிந்திறு மாப்படை யாதே.

அன்னியர் குணமா மன்பெனு மணங்கி
னழகினை யின்னமுங் கேண்மோ
தன்னியல் நடக்கை தக்கவா றன்றித்
தவறுறாத் தன்மைய டனது
மன்னிய வுரிமைப் பொருடனக் காக
மறந்துமே வழங்கிட வறியாள்
என்னன செயினு மெளிவரு கோப
மில்லடீங் கொன்றுமே யெண்ணாள்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# அந்தாதி இலக்கியம்.

## திரு. அடிகளாசிரியர்.

திருவாசகத்திலுள்ள திருச்சதகப் பாட்டெல்லாம் அந்தாதியாய் அமைந்துள்ளன. இறுதியும் முதலும் மண்டலித்து முடிந்துள்ளன. இதனுள் ஒவ்வொரு பத்தும் ஒவ்வொருவகைப் பாட்டாய் அமைந்துள்ளன. இக்காரணங்களால் இதனைச் சதகம் என்று கூறுவதைக்காட்டிலும் 'பதிற்றுப் பத்தந்தாதி' என்று கூறுவது மிகவும் பொருத்தமாயிருக்கும். இத் திருச்சதகத்தின் அமைப்பைப் பின்பற்றியே அதிவீரராமபாண்டியர் என்பார் குட்டித் திருவாசகம் என்னும் திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதியைப் பாடியுள்ளார்.

"உலகத்தில் பிள்ளைப்பேறில்லை யென்றும் செல்வமில்லை யென்றும் அழுபவர் பலர்; ஆனால், கடவுளைக்காணவில்லை யென்று வருந்தி அழுபவர் எத்தனைபேர்? தேடுபவனுக்குப் பொருள் கிடைக்கும்; அதுபோலக் கடவுளைக் காண்பதற்காக அக்கறைகொண்டு அழுபவன்தான் அவனைக் காண்பான்" என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுகின்றார். திருநாவுக்கரசு சுவாமிகள் "அகம் குழைந்து மெய்வருந்தி அழுவார் தங்கள்

---

கொடுமை யென்றவர் கூறினுங் கேட்டுளம்
நடுநடுங் குவள் நாணமுற் றஞ்சுவள்
கெடல ரும்புகழ் மெய்ம்மை கிளத்தல்கேட்
டுடல மெங்கும புளகித் துவப்பளே.

வந்த வெல்லாம் பொறுத்து மகிழ்வளே
நந்தல் செய்யினும் நம்புதல் விட்டிடாள்
எந்த வேளையு மேல்வரு மின்பமே
சிந்தை செய்குவள் தீங்கு கவனியாள்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையை நன்றியறிவுடன் நினைந்து எழுந்த இந்த எளிய கட்டுரையை கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையுடைய புகழ் பொதிந்த பொன்மொழிகளோடு பேராசிரியர் நூறுவது ஆண்டில் அளித்து வணங்கி நிற்போமாக.

'ஆடும் தில்லை அம்பலவன் அடிகள் மறவா அன்புடையோன்,
பாடித் திருவா சகத்தேனைப் பருகிப் பருகி இன்புறுவோன்,
கோடைப் பதிசுந் தரமுனியைக் குருவாய்க் கொண்ட குணசீலன்,
ஈடி லாத பேரறிஞன், எங்கள் பெரியோன் சுந்தரனே.

தேடி வைத்த செல்வமெல்லாம் திரைகொண் டோட வருந்திமுகம்
வாடி மெலிந்த தமிழணங்கு மகிழ்ந்து மகிழ்ந்து கூத்தாட
நாடும் அறிய மனோன்மணிய நாடகத்தைச் செய்தளித்த
நீடு புகழோன் சுந்தரனை நித்தம் நித்தம் போற்றுவமே.

நீ. கந்தசாமி பிள்ளை.

வாயவன் காண்" என்று கூறியுள்ளனர். அழுதடி அடைந்த அன்பராகிய மணிவாசகப்பெருமான் திருச்சதகமாகிய பதிற்றுப் பத்தந்தாதியுள் தொண்ணூற்றும் பாட்டாகப் பாடியுள்ள ஒரு பாட்டின் கருத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

பற்று புறப்பற்றென்றும் அகப்பற்றென்றும் இரண்டு வகைப்படும். உலகமாகிய இடமும் அதனுள் உள்ள பலவகைப் பொருள்களும் புறப்பற்றாகும். இதனைத் திருக்குறளாசிரியர் எனதென்னும் பற்றென்பர். வடநூலார் மமகாரம் என்பர். உடம்பாகிய இடமும் அதனுள் உள்ள மனம் முதலான கருவி களும் அகப்பற்றாகும். இதனைத் திருக்குறளாசிரியர் யான் என்னும் பற்றென்பர். வடநூலார் அகங்காரம் என்பர். "யான் என்று கருதப்படுகின்ற அகப்பற்றாகிய உடம்பும் பொய்யா கும்; அவ்வுடம்பை இடமாகக் கொண்டுள்ள மனமும் பொய்யாகும்; பொய்க் கருவியாகிய மனத்தால் யான் செய்கின்ற அன்பும் பொய்யாகத்தானே யிருக்கும்; இவைகளெல்லாம் பொய்யாயினும், தாய் தந்தையர் முன் அழுது தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்ளும் குழந்தைபோல, இருவினையில் உழலும் யான் உன்னைப் பெறவேண்டுமென்று கருதி அழுதால் மெய்ம்மை யாகிய உன்னைப்பெறக் கூடுமே" என்கின்றனர் மாணிக்கவாசகர்.

"யானே பொய்யென் னெஞ்சும்
பொய்யென் அன்பும்பொய்
ஆனால் வினையே னழுதால்
உன்னைப் பெறலாமே" (திருவாச. திருச்சதகம்–90)

மக்கள் மனத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒருசாரர் மனம் கடவுள் இன்பத்தைக் கருதாமல் உலக இன்பத்தை மெய் யென்றெண்ணி அதனை நகர ஓடிக்கொண்டிருக்கும். மற்றொரு சாரர் மனம் உலக இன்பத்தை நிலையற்றதென்று கருதிக் கடவுளின் பத்தையே மெய்யென்றெண்ணி அதனை நகர ஓடிக்கொண்டிருக் கும். இவ்வாறு மக்கள் மனம் ஒருமுகப்படாமல் வெவ்வேறு குறிக்கோளைக் கருதி மாறுபட்டு ஓடுவானேன் என்றால், அவரவர் மனம் பக்குவப்பட்ட நிலையே அதற்குக் காரணம் ஆகும். இதனை நன்கு உணர்ந்து கொள்ளாமல் ஒருவர் மற்றொருவர் செல்லும் வழியை இகழ்ந்து கூறுவதாலே நாட்டில் வேற்றுமை விளைவதேயன்றி வேறு எப்பயனும் உண்டாவதில்லை.

கடவுளுடைய திருவடியை யாருடைய சிந்தை அடையும் என்பதை முதற்றிருவந்தாதி முப்பதாம் பாட்டில் பொய்கை யாழ்வார் கூறுகின்றார். "உள்ளத்தைத் தெளிவுடைய தாகச் செய்து, அதனை நல்ல வழியிலே நிறுத்தி, ஞான நூல்களை நன்கு பயின்று, கிடைத்த ஆழ்ந்த அறிவினாலே, மிக எளிமையாய்

உண்மைப் பொருளை நன்கு உணரத்தொடங்கியவருடைய மனமானது, தாய்ப்பசுவை நாடி ஓடுகின்ற கன்றுக்குட்டியைப்போல இறைவனுடைய திருவடிக்கே ஓடும்'' என்று கூறுகின்றார்.

"தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ ஞானத்(து)
எளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து'' (நாலாயிரம்: முதல்திருவந்-30)

அபிராமி பட்டர் செய்த அபிராமி அந்தாதி திருவாசகத்தைப் போலப் படிப்பவர் மனத்தை உருக்குந் தன்மை வாய்ந்தது. அதனுள் ஒரு செய்யுளைப்பார்ப்போம். நம் மனத்தில் எத்தனையோ தீய குணங்களிருக்கின்றன; அக்குணங்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து கண்டுபிடித்து அவற்றை நீக்கப் பழகவேண்டும். மனத்திலுள்ள தீய குணங்களைப் போக்குவதற்கு நம் நாட்டுப் பெரியோர் சுருக்கமான வழியொன்றனைக் கூறுகின்றனர். அமைதியைத் தரத்தக்க தூய்மையான இடத்திலே தன்னந் தனியாய் இருந்து தனக்குப் பிரியமான கடவுளை எண்ணி மனம் உருகுதலே அந்த வழியாகும். மனம் உருகிய தியானமானது மனத்தை ஒருமுகப்படுத்தித் தூய்மை செய்யும் ஆற்றல் வாய்ந்த தென்பது அறிஞர் கண்ட முடிபாகும். பட்டர் அபிராமி தேவியைப் பார்த்துக் கூறுகின்றார். "தேவியே! உன்னை விரும்பிக் கும்பிடும் அடியாருடைய மனத்திலே மிகுதியான அன்பு விளைகின்றது; அதனால், விழியிலே மிகுதியான கண்ணீர் நிறைகின்றது; உடம்பு முழுதும் மயிர் சிலிர்க்கின்றது; மனங்கொள்ளாமல் பொங்கி வழியும் இன்பம் உண்டாகின்றது; அதனால் அவர் தன்வசமிழந்து உன்வசமாகின்றனர்; புதிய தேனையுண்ட வண்டினைப்போலப் புதுக்களிப் படைகின்றனர்; அதனால், அவர்கள் மொழி குழறிவிடுகின்றது. இத்தகைய தொண்டரைப் பார்க்கின்ற மக்களுக்கும் முன்பு சொன்ன அன்பு நிலையே உண்டாகின்றது; அபிராமியே! உன் வழிபாடு இப்படி எல்லோருடைய மனத்திலும் ஏராளமான அன்பினை உண்டாக்கி விடுவதால் உன் சமயந்தான் உலகத்திலே மிக உயர்ந்த சமயமாகும்'' என்று கூறுகின்றார்.

"விரும்பித் தொழுமடி யார்விழி
நீர்மல்கி, மெய் புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்த
மாகி அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு
மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்த ராவரென் றாலபி
ராமி சமயம் நன்றே'' (அபிராமி—94)

சேரமான் பெருமாள் நாயனாரால் செய்யப்பட்டது பொன் வண்ணத் தந்தாதி என்னும் நூலாகும். அதில் அவர் தன் பாட்டினை இறைவனுக்கு ஏற்பிக்கும் முறை அழகாயுள்ளது. சிலர் பிறர் பாடிய பாட்டிலுள்ள சொற்பொருளை எடுத்துத் தம் பாட்டில் வைத்துக்கொண்டு அச்சொல்லையும் பொருளையும் முதன் முதல் தாமே அமைத்துப் பாடியதாகப் பறைசாற்றித் திரிவார். இவர்களைப் புலவர்கள் 'கள்ளக்கவி' என்றழைப்பர். இக்கள்ளக் கவிகளைக் குறிப்பிட்டு சேரமான் பெருமாள் நாயனார் செப்பு கின்றார்: "இறைவனே! யான் அரசன் என்ற செருக்கால் நன்கு கற்றுத் தெளிந்த புலவர்களைச் சேரவும் எண்ணுவதில்லை; ஆனால், உன்மேல் இனிய செய்யுள்கள் பல செய்யவேண்டும் என்று மட்டும் தொடங்கியுள்ளேன்: இனிய பாட்டினைப் பாட வேண்டுவதற்குரிய சிறந்த சொற்களையும் பொருள்களையும் யான் பெறவில்லையே! அறிஞர் பாடிய பாட்டிலிருந்து சொற்களையும் பொருளையும் திருடப்புகுந்தால் உலகத்திலுள்ள புலவர்கள் அத் திருட்டைச் செய்யச் சிறிதும் விடமாட்டார்கள்; கற்றுத் தெளிந்த புலவரையும் சாராமல், அறிஞருடைய பாட்டிலிருந்து திருடவும் முடியாமல் நான் பாடுகின்ற பாட்டு எப்படியிருக்கும்? அப் பாட்டு நீ ஏற்றுக்கொள்ள முடியாத, குற்றம் நிரம்பிய பாட்டுக்க ளாகவே யிருக்கும்; இருந்தாலும் நீ கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவனல்லவா! ஆதலால், யான் கூறுகின்ற புல்லிய பாட்டு உன் காதிற்குக் கசப்புத்தந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்று நயம்பெறக் கூறுகின்றனர்.

"தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன்
  தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும்
  பெறேன்உரைத் தாருரைத்த
கள்ளிய புக்கால் கவிகள்ஒட்
  டார்கடல் நஞ்சயின்றாய்!
கொள்ளிய அல்லகண் டாய்புன்சொல்
  ஆயினும் கொண்டருளே". (தொடரும்)

---

## மகிழ்ச்சி

க. த. சங்கத்தின் உறுப்பினரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியருமான டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் சென்னை மேல்சபை (M. L. C.) உறுப்பினராக ஆசிரியர் தொகுதியினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதறிந்து பெருமகிழ்ச்சி யெய்துகிறோம். பேராசிரியர் அவர்கட்கு எமது மனமார்ந்த பாராட்டு களைத் தெரிவித்துக்கொள்கிறோம். பொழிற்றொண்டர்.

# தூங்கானை மாடம்.

தி. வை. சதாசிவ பண்டாரத்தார்.

பண்டைக்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த நம் முன்னோர்களாகிய தமிழ் மக்கள் தெய்வங்கொள்கையுடையவர்களாக விளங்கினர் என்பது நம் தாய் மொழியாகிய தமிழில் கடவுள், இயவுள் முதலான தனித் தமிழ்ச் சொற்கள் தொன்றுதொட்டு வழங்கி வருதலால் நன்கறியக் கிடக்கின்றது. தமிழ் நூல்களுள் மிகப்பழமை வாய்ந்ததாகவுள்ள தொல்காப்பியத்தில் காணப்படும் சில சூத்திரங்களாலும் இவ்வுண்மை வலியுறுதல் உணரற்பாலதாகும். கடவுட் கொள்கையினராய் வாழ்ந்துவந்த அன்னோர் தம் கடவுளர்க்குக் கோயில்கள் அமைத்து நாள் வழிபாடும் திங்கள் விழாக்களும் ஆண்டு விழாக்களும் மிகச் சிறப்பாக நடத்திவந்தனர் என்பது பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலான கடைச் சங்க காலத்து நூல்களால் தெள்ளிதிற் புலப்படுதல் காணலாம். ஆனால், அத்திருக்கோயில்களின் அமைப்பும் சிற்பத்திறனும் பிறவும் எத்தகையன என்பதை இக்காலத்தில் ஆராய்ந்தறிந்து கொள்வது இயலாததொன்றேயாம். எனினும், அக்கோயில்கள் எல்லாம் செங்கற்களாலும் சுண்ணும்பினாலும் மரங்களாலும் கட்டப்பெற்றவை என்பதை மாத்திரம் உறுதியாகக் கூறலாம். இவ்வுண்மையினைச் 'சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பு[1]' எனவும், 'இட்டிகைப் புரிசை[2]' எனவும், 'இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம்[3]' எனவும் போதரும் சங்கத்துச் சான்றோர் பாடல்களிலுள்ள தொடர்களால் அறிந்துகொள்ளலாம். அறுபத்து மூன்று அடியார்களுள் ஒருவராகிய கோச்செங்கட்சோழர் பல சிவன் கோயில்கள் எடுப்பித்துள்ளனர் என்பது சைவசமய குரவர்களின் திருப்பதிகங்களால் புலப்படுகின்றது. கடைச்சங்க நாளில் நிலவிய அவ்வரசர் பெருமான் எடுப்பித்த அக்கோயில்கள் எல்லாம் செங்கற்களாலும் சுண்ணும்பினாலும் அமைந்தனவேயாம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் நம் தமிழகத்தில் முதலில் கருங்கற் கோயில்கள் தோன்றின என்பது அறிஞர்கள் ஆராய்ந்து கண்டதோர் உண்மையாகும். அக்கோயில்களும் குன்றுகளைக் குடைந்து அமைக்கப்பெற்றவையே. அவற்றை முதலில் அமைக்கத் தொடங்கி வெற்றிகண்டவன், நம் தமிழ் நாட்டின் வட பகுதியைக் காஞ்சி மாநகரிலிருந்து கி. பி. 600 முதல் 630 வரை அரசாண்டவனும், திருநாவுக்கரசு அடிகள் பொருட்டு இறைவன் நிகழ்த்திய அருஞ்செயல்களைக்கண்டு சைவ சமயத்திற்குத் திரும்பியவனும், பல்கலைச் செல்வனுமாகிய முதல் மகேந்திரவர்மன் என்ற பல்லவ வேந்தனேயாவன். அவன் அமைத்த கோயில்கள் குடைவரைக் கோயில்கள் எனவும் வழங்கப்படுகின்றன. அவற்றில் கருவறையின்மேல் விமானமின்மை அறியத்தக்கது.

அவன் மகனும் 'வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரையர்' என்று பாராட்டப்பட்டவனும் சிறுத்தொண்ட நாயனாரைத் தன்

---

1. பெரும்பாணாற்றுப்படை—405. 2. அகநானூறு—287. 3. அகநானூறு—167.

படைத் தலைவராகக்கொண்ட பெருமையுடையவனும் திருஞானசம்பந்தர் காலத்தில் இருந்தவனும் ஆகிய முதல் நரசிம்மவர்மன் (கி. பி. 630—668) என்ற பேரரசனே, சிறு குன்றுகளைக் குடைந்து கருவறையும் அதன்மேல் விமானமும் அவற்றின் முன்னர் முகமண்டபமும் பொருந்திய கோயில்களாக அமைத்தவன். அவற்றில் காணப் படும் சிற்ப நுட்பங்களும் பிற சிறப்புக்களும் காண்போர் கண்களைக் கவர்ந்து தன் வயமாக்கும் இயல்பினவாகும். அக்கோயில்களிலுள்ள விமானங்கள் இரண்டுநிலை மூன்றுநிலைகளை யுடையனவாயிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். அன்றியும், நிமிர்ந்து உட்கார்ந்த சிங்கங்களின்மேல் அமைக்கப்பெற்ற சிங்கத்தூண்கள் முதல் நரசிம்மவர்மனுடைய கோயில்களில்தான் முதலில் காணப்படுதல் உணரற்பாலது.

கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கிக் கருங்கற்கோயில் முதலில் எடுப்பித்தவன் இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற பல்லவ மன்னனேயாவன். அவன் மேலே குறிப்பிட்ட முதல் நரசிம்மவர்மன் பேரனுகிய முதல் பரமேசுவரவர்மனுடைய மகன். அவன் கருங்கற்களால் அமைத்த பெருங்கோயில் காஞ்சி மாநகரிலுள்ள கைலாயநாதர் ஆலயமேயாகும். முற்காலத்தில் அக்கோயில் அவன் சிறப்புப் பெயரால் இராசசிம்ம பல்லவேச்சுரம் என்று வழங்கி வந்தது. அவன் சிவபெருமானிடத்தில் ஒப்பற்ற பக்தியுடையவனுய்த் திகழ்ந்தமை பற்றி அவனைச் 'சிவசூடாமணி[1]' எனவும், 'சங்கரபக்தன்[2]' எனவும், 'ஈசுவர பக்தன்' எனவும், 'பரம மகேசுவரன்[3]' எனவும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் புகழ்ந்துரைக்கின்றன. வேலூர்ப்பாளையச் செப்பேடுகள், அவன் காஞ்சிமா நகரில் சிவபெருமானுக்குக் கயிலாயத்தை யொத்த கோயில் எடுப்பித்த பெருமையுடையவன்[4] என்று பாராட்டிக் கூறுகின்றன. சைவ சமய குரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திகள், தம் காலத்தில் பரம மகேசுவரனுக வாழ்ந்த அப் பேரரசனை அறுபத்துமூன்று சிவனடியார்களுள் ஒருவராக வைத்து தாம் பாடியருளிய திருத்தொண்டத் தொகையில் 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கனடி யார்க்குமடியேன்' என்று வணக்கம் கூறியிருத்தல் அறியற்பால தொன்றும். கி. பி. ஏழாம் நூற்ருண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் நிலவிய அவ்வேந்தனே முதன் முதல் கருங்கற்கோயில் கட்டியவன் என்பது நன்கறியப்படுதலால், சைவ சமய குரவர்கள் மூவரும் ஊர்தோறும் சென்று இறைவனை வணங்கித் திருப்பதிகங்கள் பாடியருளியபோது இருந்த சிவன் கோயில்கள் எல்லாம் செங்கல்லால் கட்டப்பெற்ற கோயில்களே என்பது தெள்ளிது.

இரண்டாம் நரசிம்மவர்மனும் அவனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த பல்லவ மன்னர்களும் எடுப்பித்த கருங்கற்கோயில்கள் மிகச்சிலவே

1. South Indian Inscriptions, Vol. I, Nos. 24 and 31.
2. I bid, No. 25 Verse 55
3. Udayendiram Plates of Nandivarmam II, S. I. I., Vol. II, No. 74.
4. I bid, No. 98.

யாம். அவற்றுள், சித்தூர் ஜில்லாவிலுள்ள திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயில் அமைப்பு, ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள் ஒரு முடிந்த முடிபிற்கு வருமாறு செய்துள்ளமை ஈண்டு குறித்தற்குரியதாகும். அக்கோயில் கருங்கல்லால் கட்டப் பெற்றது; அதன் கருவறையின் மேலுள்ள விமானம் யானை படுத் திருப்பதுபோன்ற அமைப்பு உடையது. அது 'தூங்கானைமாடம்' என்று வழங்கப்படும். அதனை வடமொழியாளர் 'கஜபிருஷ்ட விமானம்' என்பர். அவ்விமானத்துடன் அமைக்கப்பட்டுள்ள திருத் தணிகைக் கற்றளியில்,

'திருந்து திருத்தணியற் செஞ்சடையீ சற்குக்
கருங்கல்லாற் கற்றளியா நிற்க—விரும்பியே
நற்கலைக ளெல்லா நவின்றசீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து[1]'

என்ற வெண்பா ஒன்றும் அதன்கீழ் 'இவ்வெண்பா பெருமானடிகள் தாம் பாடி அருளித்து' என்ற குறிப்பும் வரையப்பட்டுள்ளன. இவற்றால் திருத்தணிகைக் கோயிலைக் கற்றளியாக அமைத்தவன் நம்பி அப்பி என்ற தலைவன் என்பதும், இச்செய்தியைக் குறித்த இப்பாடலை இயற்றியவன் ஓர் அரசனாயிருத்தல் வேண்டும் என்பதும் நன்கு துணியப்படும். அக்கோயிலிலுள்ள மற்றொரு கல்வெட்டு,[2] அபராஜித விக்கிரமவர்மனது ஆட்சியின் 18-ம் ஆண்டில் நம்பி அப்பி என்பான், அங்கு நடைபெறவேண்டிய நாள் வழிபாடு முதலான வற்றிற்கு நிவந்தமாக நிலம் அளித்ததை உணர்த்துகின்றது. எனவே, நம்பி அப்பி என்பவனது திருத்தணிகைக் கோயில் திருப் பணியைப் புகழ்ந்து வெண்பா இயற்றியவன் பல்லவ வேந்தனாகிய அபராஜிதவர்மன் என்பது தேற்றம். இவன், தன் நண்பர்களாகிய முதல் ஆதித்தசோழன், கங்கமன்னன், முதல் பிருதுவிபதி ஆகியோர் துணைகொண்டு, இரண்டாம் வரகுணபாண்டியனைத் திருப் புறம்பயப் பெரும்போரில் கி. பி. 880 ஆம் ஆண்டில் வென்று வாகை சூடியவன்[3]. ஆகவே, பல்லவ அரசர்களுள் இறுதியில் இருந்தவன் இவனேயாவன். இவனது ஆட்சிக் காலமாகிய கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் திருத்தணிகையில் அமைக்கப்பெற்றுள்ள தூங்கானை மாடக்கோயில், பல்லவர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் தோன்றிய ஒரு புதிய அமைப்பைக் கொண்டது என்பது ஆராய்ச்சி யாளர்களாகிய அறிஞர்களது கருத்து[4]. எனவே, தூங்கானை மாடக் கோயில்கள் எல்லாம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் அதற்குப் பின்னரும் கட்டப்பெற்றவை என்பதும் அவை அபராஜிதவர்மன் காலத்துக் கோயில் அமைப்பு என்ற ஒருவகைத் தனி அமைப்புடையவை என்பதும் அவர்கள் கண்ட முடிவுகளாகும்.[5]

1. S. I. I., Vol. XII, No. 94. 2. Ibid, No. 95.
3. பிற்காலச் சோழர் சரித்திரம், முதற்பகுதி (இரண்டாம் பதிப்பு) பக். 24.
4. Pallava Architecture, Part III by A. H. Longhurst.
5. Pallava Antiquities, by G. Jouveau—Dubreuil, Vol. II, pp. 18 and 24.

இனி, சைவ சமய குரவர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசு அடிகள் பாடியருளிய திருப்பதிகங்களுள் திருத்தூங்கானைமாடப் பதிகம் ஒன்று உளது. அப்பதிகத்துள் ஏழு பாடல்கள் கிடைக்காமையால், இப்போது மூன்று பாடல்களே இருக்கின்றன. அப்பாடல்களால் பெண்ணுகடம் என்னும் கடந்தையிலுள்ள திருக்கோயில் 'தூங்கானை மாடம்' என்ற பெயருடையது என்பது தெளிவாகத் தெரிகிறது. அவற்றுள் ஒன்று,

'பொன்னர் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னுவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண் டல்
துன்னர் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே'

என்பதாம்.

ஆகவே, திருநாவுக்கரசு அடிகள் விளங்கிய காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே நடுநாட்டுத் தலங்களுள் ஒன்றாகிய பெண்ணுகடத்திலிருந்த திருக்கோயில் தூங்கானைமாட அமைப்பினையுடையதாக இருந்தது என்பது தெள்ளிது. எனவே, கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் அபராஜிதவர்மன் என்ற பல்லவ மன்னன் ஆட்சிக் காலத்தில்தான் தூங்கானைமாடக் கோயில் முதலில் அமைக்கப்பட்டது என்பது எவ்வாற்றானும் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. அன்றியும், பல மாடக்கோயில்கள் திருநாவுக்கரசர் காலத்திற்கு முன்னரே நம் தமிழகத்தில் இருந்தன என்பது பல சான்றுகளால் உறுதியாதல் காணலாம்.

இனி, மாடக்கோயில்கள் எக்காலத்தில் தோன்றின என்பது ஆராய்தற்குரியதாகும். கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நந்திவர்மப்பல்லவமல்லன் ஆட்சிக்காலத்தில் நிலவிய வைணவ சமய குரவராகிய திருமங்கையாழ்வார், தம் திருநறையூர்ப் பதிகத்தில் கோச்செங்கட்சோழர் சிவபெருமானுக்கு எழுபது மாடக்கோயில்கள் எடுப்பித்து உலகமாண்ட செய்தியைக் கூறியுள்ளனர். திருநாவுக்கரசரும் தம் காலத்தில் எழுபத்தெட்டு மாடக்கோயில்கள் இருந்தமையை அடைவு திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளமை அறியத் தக்கதாகும். அக்கோயில்கள் எல்லாம் கோச்செங்கட்சோழர் எடுப்பித்தவையே என்பது தேவாரப் பதிகங்களால் தெளிவாகப் புலப்படுகின்றது. அவைகள் செய்குன்றுகள் மேல் அமைக்கப்பெற்றவையாதலின் அவற்றைப் பெருங்கோயில் எனவும் மலைக்கோயில் எனவும் சைவசமய குரவர் மூவரும் தாம் பாடியருளிய திருப்பதிகங்களில் குறித்துள்ளமை உணரற்பாலது. அவ்வகையைச் சேர்ந்ததே தூங்கானைமாடமும் ஆகும். எனவே, மாடக்கோயில்களுள் ஒன்றாகிய தூங்கானைமாடம் கோச்செங்கட்சோழர் கடைச் சங்க காலத்தில் செங்கற்களாலும் சுண்ணும்பினாலும் எடுப்பித்த கோயிலேயாகும். ஆகவே, அது கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே கோச்செங்கட் சோழரது ஆட்சியில் ஏற்பட்ட கோயில் அமைப்பு என்று

சென்ற இதழின் தொடர்ச்சி.

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

## சேனுவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு]

'உண்டான்' என்பது வினைச் சொல்லிற் குதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது; "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது) நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" (தொல்-சொல்-வினை, என விதியிருத்தலினென்க.

'உண், தின்' முதலியன வினைச் சொல்லிற்கடியாக வருதலினனும், வினையை (தொழிலை) யுணர்த்துதலினனும் வினைச்சொல்லெனக் கூறலாமெனின், அவை தல் முதலிய இறுதி நிலைகளுடன் கூடி வேற்றுமையுருபை யேற்றற்குரிய தன்மையுடைமை யானும் காலமொடு தோன்றுமையானும் தனிவினைப் பெயர்ச்சொல்லெனப் படுமன்றி வினைச்சொல்லெனப் படாமையான் அவற்றை வினைச் சொல்லிற்குக் காட்டாகக் காட்டினரில்லை யென்க.

ஒன்று இரண்டு, பல என வழங்குதல் வட நூல் வழக்கு. ஒன்று, பல என வழங்குதல் தமிழ் நூல் வழக்கு என்பது வெளிப்படை.

---

(20ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியாகக் கூறலாம். அவ்வமைப்பைப் பின்பற்றியே பல்லவ வேந்தனாகிய அபராஜிதவர்மன் ஆட்சிக் காலத்தில், திருத்தணிகையிலுள்ள வீரட்டானேசுவரரின் தூங்கானைமாடக்கோயில் கருங்கற்களால் எடுப்பிக்கப்பெற்றுள்ளது என்பது திண்ணம். எனவே அஃது அப் பல்லவ அரசன் காலத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய புதிய கோயில் அமைப்பு என்று கூறுவது சிறிதும் பொருந்தாமை காண்க.

இனி, பல்லவர் ஆட்சிக்குப் பிறகு கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல் நடைபெற்ற சோழர் பேரரசில்தான் தமிழகத்திலுள்ள செங்கற் கோயில்களுள் பல, கருங்கற் கோயில்களாக அமைக்கப்பெற்றன என்பது அவ்வக் கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களால் நன்கு புலப்படுகின்றது. அவற்றுள், கோச்செங்கட்சோழர் முற்காலத்தில் செங்கற்களால் எடுப்பித்திருந்த மாடக் கோயில்களைப் பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த பேரரசர்களாகிய சோழர்கள் கருங்கற் கோயில்களாக அமைத்திருத்தலை இன்றும் காணலாம். கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள இன்னம்பரிலும் பேரளத்திற்கு அண்மையிலுள்ள திருமீயச்சூரிலும் தூங்கானைமாடக் கோயில்கள் இருத்தல் அறியத்தக்கதாகும்.

ஆசிரியர் தொல்காப்பியர் "ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல் பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி" "ஒன்றறிசொல்லே பலவறிசொல்" (தொல்-சொல்-கிளவி.) என்பன முதலியவற்ருல், தமிழில் மொழிகள் பொருள்களை யுணர்த்து நிலைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்டன வெல்லாம் பலவெனப்படுமென்று கொள்ளக் கூறினர்.

இங்ஙனம் கூறியவர், மொழிகள் தனித்து நில்லாமல், தொகை நிலைத் தொடர் மொழிகளாகவும் தொகா நிலைத் தொடர் மொழிகளாகவும் தொடருமிடத்து இரு மொழிகளே கல்லெறிந்தான், கொல்யானை, கருங்குதிரை, பவளவாய், உவாப்பதினன்கு, பொற்றொடி, சாத்தன் வந்தான், சாத்தா வருதி, வந்தான் சாத்தன், வந்த சாத்தன், வந்து போனன், மற்றொன்று, நனிபெரியன், பாம்பு பாம்பு, என்பனபோல இயைந்து நிற்றலானும் இரு மொழிக்கு மேலே நிலைமொழி வருமொழிகளாகவுள்ள அவைகளுக்கு அடை மொழி முதலியனவாகப் பல மொழிகள் வேண்டுழி வந்து கூடினல் பன்மொழித் தொடராக அமைதலானும் இருமொழித் தொடரைப் பன்மொழித் தொடரு ளடக்காது பிரித்துக் கூறத்தகுஞ் சிறப்புடைய தாகக் கருதி 'அவைதாம்' பின்மொழி நிலையலும் முன்மொழியலும், இருமொழிமேலு மொருங்குடனிலையலும்' "இருபெயர் பல்பெயர்" (தொல்—சொல்-எச்) எனப் பிரித்துக் கூறினமையால், "தொடர் மொழி, இருமொழித் தொடரும் பன்மொழித் தொடருமென இரண்டு வகைப்படு"மென்றனரென்க.

இனி எழுத்துக்கள், மொழியாகுங் காலத்து "ஓரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொருமொழி இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி" (தொல்—எழுத்-மொழி மரபு) என ஒருமை இருமை பன்மையென்னும் வடமொழி முறைபற்றிக் கூறினமையால் ஆசிரியருக்கு மொழிகள் நிற்குமிடத்தும் தனிமொழியாகவும் இருமொழியாகவும் இருமொழி யொழிந்த தொடர்மொழியாகவும் நிற்குமெனக் கொள்ளுங் கருத்து முண்டெனக் கொண்டமையால் சேனவரையர், இருமொழித் தொடர் பன்மொழித் தொடர் எனத் தொடர்மொழி இரண்டு வகைப் படுமெனக் கருதினரென இத்தொடர் குறிக்கின்ற தெனினுமாம்.

இனி "இருபெயர் பல்பெயர்" என்னும் எச்சவியற் சூத்திர வுரையில் சேனவரையர், 'வேற்றுமைத் தொகை முதலாயின பல சொல்லாற் றொகுதல் சிறுபான்மை, அதனல் உம்மைத் தொகை இரு சொல்லானும் பல சொல்லானும் ஒப்பத் தொகுமென்பதறிவித் தற்கு, "இருபெயர் பல்பெயர்" என்ருர் என எழுதி இருத்தலையு மிங்குக் கொணர்ந்து நோக்கல் தகும்.

'அதிகாரம்' என்பது வட மொழியாகும். அது, தலைமை தகுதி உரிமை ஆணை இடம் முதலிய பல பொருளில் வருதலால் "அதிகாரம் என்னுஞ் சொற்குப் பொருள் பல உளவேனும்" என்றனர்.

இவ்வூர்க் கிவ னதிகாரி என்புழித் 'தலைமை' யையும் இந்நூற் கிவனதிகாரி என்புழித் 'தகுதி' யையும் இப்பொருட்கிவனதிகாரி

என்புழி 'உரிமை'யையும் இவனதிகார மெங்குஞ் செல்லுமென்புழி 'ஆணை'யையும் இவ்வதிகாரத்து ளிது கூறப்பட்டது என்புழி இடத்தையும் இவ்வாறு இன்னும் பிற பொருளையும் இடத்திற்கேற்ப உணர்த்துதல் காண்க.

தொல்காப்பியம் பொருளதிகார மரபியலில் "ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பின்" எனத் தொடங்கும் உத்திவகைகளைக் கூறும் நூற்பாவின்கண் "நுதலியதறிதல் அதிகார முறையே" என்னுமடியில் வரும் "அதிகார முறையே" என்பதற்குப் 'பேராசிரியர்' "அதிகார முறை—முன்னின்ற சூத்திரப் பொருண்மை பின்னின்ற சூத்திரத்துப் பெறற்பாலன பெறவைத்தல்" என எழுதிப் பின்னர் "அதிகாரம் என்ற பொருண்மை யென்னை யெனின் முறைமை யெனவும் இடமெனவும் கிழமையெனவும் கொள்ளப்படும். அவற்று ளீண்டதிகார மென்றெழியாது முறைமை யெனவுங் கூறினமையின் அதிகாரமென்பது முறைமைப் பொருட்டன்றி முன்னோரிடத்து நிறுத்தியதன் வழிமுறையாற் பொருள் கோடல் கொள்க" என விளக்கமுங் கூறினர்.

உரையாசிரியர், அதிகார முறைமை—முன்னம் பல பொருளை யதிகரித்தவழிப் பின்னுமம்முறையானே விரித்துணர்த்தல்.

அஃதாவது உயர்திணை யஃறிணையென அதிகரித்து 'ஆடு உவறிசொல்' (கிளவியாக்கம் 2) என்னுஞ் சூத்திரத்தால் நிறுத்த முறை பிறழாமல் உயர்திணை கூறல்.

இன்னு மிதனானே ஒரு சூத்திரத்திலே கருதின பொருளை வைத்து வருகின்ற சூத்திரத்துள் ஓதாது அதன் காரியமாயின கூறிய வழி அதனைச் சூத்திரந்தோறுங் கொணர்ந்துரைத்தல். அஃதாவது "அகரவிறுதிப் பெயர்நிலை முன்னர்" (உயிர் மயங்கியல் -க) என்னுஞ் சூத்திரத்திற் "கசதபத்தோன்றி" னெனவோதி "வினையெஞ்சுகிளவியு (உயிர்மயங்கியல்-உ)மென்னுஞ் சூத்திரத்துள் ஓதிற்றிலராயினும் அதிகார முறையினால் வல்லெழுத்து வருவழி யென வுரைத்தல்" எனக் கூறினர்.

இனி இங்கு, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் "அதிகாரம் —முறைமை எனவும் சொல்லதிகாரம் அது சொல்லையுணர்த்திய அதிகாரம் என விரியும் எனவும் கூறினர்.

இனி நன்னூல் விருத்தியுரைகாரர் 'அதிகாரம்'—அதிகரித்தல் (மேம்படல்). அஃதிருவகைப்படும். அவற்றுள் ஒன்று வேந்தனிருத்துழி யிருந்து தன்னில முழுவதும் தன்னாணையினடப்பச் செய்வதுபோல ஒரு சொல் நின்றுழி நின்று பல சூத்திரங்களும் பல வோத்துக்களும் தன் பொருளே நுதலிவரச்செய்வது. ஒன்று சென்று நடாத்துந் தண்டத் தலைவர்போலப் பல சூத்திரங்களோடுஞ் சென்றியைந்து தன் பொருளைப் பயப்பது. இவற்றிற்கு முறையே

வட நூலார் யதோத்தேச பக்கமெனவும், காரிய கால பக்கமெனவும் பெயர் கூறுப. இது சேனாவரையருரையானு முணர்க. அவற்றுள் ஈண்டதிகாரமென்றது முன்னையது. அதனையுடையதெனவே எழுத்தை நுதலிவரும் பல வோத்தினது தொகுதி எழுத்ததிகார மென்றாயிற்று எனச் சேனாவரையர் உரைத்த வுரையை விளக்குவார் போலக் கூறினர்.

அதிகரித்தல் என்பதையே உரையாசிரியர் 'முறைமை' என்றனர் என்னலாம். அவரவ்வாறு கருதியதாகப் புலப்பட்டிலது. சேனாவரையர் 'அதிகாரம்' என்பதற்குப் போந்த பொருளாகத் 'தொகுதி' யென்றனர். 'அதிகாரம்' என்பதற்கு வடநூலுரைகாரரொருவர் "அதிக்கிரியதே உபரித நசூத்திர சாலசேடத்துவேந பட்டியதே" அதாவது மேல்வரும் பல நூற்பாக் குழுவின் கிழமையதாகப் படிக்கப் படுவது என எழுதியுள்ளார். வட நூலுள் யதோத்தேச பக்கமாக வருவன "பூர்வாத்ராசித்தம்" என்பது முதலியன. காரிய கால பக்கமாக வருவன "காரகே" என்பது முதலியனவாகும்.

'அதிகாரம்' என்பதற்கு, அது தனியே நிற்பின் 'முறைமை' யெனப் பொருள் கூறலும் பொருந்துமெனப் பேராசிரியர் கருதுகின்றனர் எனவுங் கூறலாம். பேராசிரியர், "அதிகாரமென்றாழியாது முறைமை எனவுங் கூறினமையின் "அதிகாரம்" என்பது முறைமைப் பொருட்டன்றி முன்னேரிடத்து நிறுத்தியதன் வழிமுறையாற் பொருள் கோடல்" என அதிகாரம் என்பதற்கு உரையாசிரியர் கொண்ட "முறைமை" என்னும் பொருளை மறுத்துச் சேனாவரையர் முதலியோர் கருத்தோ டொன்றுபட அதற்குரையிட்டனர். உரையாசிரியர் "அதிகாரம்" என்பதற்கு முன்னர் முறைமை என எழுதி அதே உரையை "அதிகார முறையே" (மரபியல்) என்றவிடத்து முதலிற்பெறப்பட எழுதிப் பின்னர்க் காரிய கால பக்கமாக அதிகரித்தல் என்பதுபட எழுதினர்.

வடநூலுரைகாரரும் நன்னூல் விருத்தியுரைகாரரும் சேனாவரையரும் அதிகாரம் என்பதற்கு, படிக்கப்படுவது, அதிகரித்தல், தொகுதி எனக்கூறும் வகையில் வேறுபடினும் பொருளாலொத்த வுரைகளே கூறியவராவார்கள்.

ஒரு சொல் நின்றுழி நின்று பல சூத்திரங்களும் பல வோத்துக் களும் தன் பொருளே நுதலிவரச் செய்வது என்பதும்

"மேலே வரும் சூத்திரங் கூட்டங்களின் சம்பந்தமுடையதாக முன்னர்ப் படிக்கப்படுவது" என்பதும்,

"ஒரு பொருளை நுதலிவரும் பல சூத்திரத் தொகுதி" என்பதும்,

பொருளா லொத்தனவாக நிற்றல் காண்க.

(தொடரும்)

# போரும் அமைதியும்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனர்.

பழந்தமிழ் மக்கள் போரின் கொடுமையை நன்ருக அறிந்திருந்தனர். நாட்டுக்கு நலம் உள்ள செயல்கள் எதையும் போர்க் காலத்தில் செய்யமுடியாது; மக்கள் வாழ்வுக்கு வேண்டிய ஆக்க வேலை போர்க் காலத்தில் நடைபெருது; நாச வேலைதான் போர்க் காலத்தில் நடைபெறும். இந்த உண்மை நமது முன்னேர் உணர்ந்ததுதான்.

## அமைதியால் நன்மை.

நாட்டிலே அமைதி குடிகொண்டிருந்தால்தான் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்; மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பண்டங்களுக்குப் பஞ்சம் உண்டாகாது. அவைகள் வேண்டிய அளவு விளைவிக்கப்படும். மக்கள் விரும்பும் கலைகள் வளரும்; கவிதைகள் வளரும்; வறுமை ஒழியும்; செல்வம் செழிக்கும்; நாடெங்கும் விழாக்களும், விளையாட்டுக்களும் நடைபெறும்; அமைதி நிலவும். எல்லா நாடுகளிலும் இந்த நிலையை நாம் காணுகின்ருேம்.

போர்க் காலத்தில் மக்கள் ஒழுக்கமும் கெட்டுப்போகும்; அமைதியான காலத்தில்தான் மக்களிடம் ஒழுக்கம் வளரும்; அமைதியான காலத்தில்தான் கூடா ஒழுக்கங்களில் தலைப்படும் மக்களைத் தடுத்து நல் வழியிலே நடக்கும்படி செய்யவும் முடியும்.

சுருக்கமாகச் சொன்னல், போரினல் ஒரு நாட்டு மக்களின் ஒழுக்கம் கெடும்; செல்வம் அழியும்; இன்ப வாழ்வு சிதையும். அமைதியால் நாட்டிலே ஒழுக்கம் உயரும்; செல்வம் பெருகும்; இன்ப வாழ்வு வளரும். இந்த உண்மையை என்றும் எவரும் மறுக்கமுடியாது.

பதிற்றுப்பத்தின் மூன்ரும் பத்தைப் பாடிய ஆசிரியர், பாலைக் கௌதமனர் இந்த உண்மையை எடுத்துக் காட்டுகின்ருர்.

"பெரிய வலிமையுள்ள பகைவர்களின், பசுமையான கண்களையுடைய யானைப் படைகள் துண்டு துண்டாகச் சிதையும்படி, மிகுந்த வீரத்துடன் அவைகளை வெட்டி வீழ்த்துவார்கள். ...ள் இரத்தம் தோய்ந்த அடிகளையுடையவர்கள்; வீரக் ...ணிந்தவர்கள்; விரைந்து செல்லும் குதிரை வீரர்கள்;

இவர்கள் விரைவாக அம்பு தொடுப்பதை மறக்கும்படி உனது நாட்டை நன்றாக அமைதியுடன் காப்பாற்றுகின்றாய்.

"நீ இவ்வாறு அமைதி நிலவும்படி அரசு செய்வதனால் உனது நாட்டிலே விளைவுப் பொருள் குறைவதில்லை; உனது நாடும் துன்பமின்றி வாழ்கின்றது.

"கோடை நிலைத்து, குன்று வறண்டு, அருவி நீர் விழாமல் வற்றிப்போன, பெரிய மழையற்ற காலத்திலும், உனது பேராற்றில் நீர் குறைவதில்லை. இரு கரைகளும் வழியும்படி நீர் பெருகி வரும். அகன்ற அப்பேராற்றின் பக்கத்தில் உள்ள பெரிய நிலங்களில் தண்ணீர் மிகுந்து பாயும். சும்மா விடப்பட்ட கரம்பு நிலத்திலே உள்ள வெடிப்புக்களில் எல்லாம் தண்ணீர் நிறையும்.

"இப்படி நிறையும்படி, தழைகளால் மூடப்பட்டு, விரைந்து வந்து மிகுதியாகப் பாய்கின்ற சிறந்த தண்ணீரின் பூசல்தான்—ஆரவாரந்தான்—உனது நாட்டில் கேட்கப்படுகின்றது. இதைத் தவிர வேறு எந்தப் போரும்—பூசலும் உனது நாட்டில் இல்லை. ஆதலால் உனது நாடு செல்வம் நிரம்பி யிருக்கின்றது,"

இவ்வாறு பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் புகழ்ந்து பாடுகிறார் பாலைக்கௌதமனார்.

திருஉடைத்து அம்ம! பெருவிறல் பகைவர்
பைம்கண் யானைப் புணர்நிரை துமிய
உரம்துரந்து எறிந்த, கறைஅடிக் கழல்கால்,
கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப,
இளை இனிது தந்து, விளைவு முட்டுறாது
புலம்பா உறையுள் நீ தொழில் ஆற்றலின்;
விடுநிலக் கரம்பை விடர்அளை நிறையக்
கோடை நீடக், குன்றம் புல்என
அருவி அற்ற பெருவறல் காலையும்
நிவந்துகரை இழிதரும் நனம்தலைப் பேரியாற்றுச்
சீர்உடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇயல்,
உவலைசூடி உருத்துவரு மலிர் நிறைச்
செந்நீர்ப் பூசல் அல்லது
வெம்மை அரிதுநின் அகன்தலை நாடே.

இதுவே அப்பாடல்; அமைதியால் ஒரு நாட்டில் ஏற்படும் நன்மையை உணர்த்திற்று.

## ஒற்றுமையின் உயர்வு.

காவிரிப்பூம்பட்டினத்துக் **காரிக்கண்ணனுர்** என்னும் புலவரின் சிறந்த பாட்டு ஒன்று புறநானூற்றிலே காணப்படுகின்றது. அரசர்கள் தம்முள் போர் செய்யாமல் ஒன்றுபட்டு வாழ்வதனுல் உண்டாகும் நன்மையை அப்பாடல் வலியுறுத்துகின்றது. தமிழ்நாட்டு மன்னர்கள் அடிக்கடி ஒருவரோடு ஒருவர் போர் புரிந்த காலத்தில் எழுந்த பாடல் அது. தமிழ் வேந்தர்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றி அப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

குராப்பள்ளித்துஞ்சிய **பெருந்திருமாவளவன்** என்பவன் ஒரு சோழமன்னன் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய **பெருவழுதி** என்பவன் ஒரு பாண்டியன். இவ்விருவரும் ஒருநாள் ஓர் இடத்திலே ஒன்ருக இருந்தனர்; பகைமையின்றி அன்புடன் அளவளாவியிருந்தனர். இதைக்கண்ட புலவர் காரிக்கண்ணனுர் உள்ளத்திலே பெருமகிழ்ச்சி பிறந்தது. இவ்வாறே தமிழ் மன்னர்கள் உவகையுடன் ஒன்றுபட்டு வாழ்ந்தால் தமிழ்நாடு எப்படியிருக்கும்! என்ற சிந்தனை அவர் உள்ளத்திலே வளர்ந்தது. போர் ஒழிந்து அமைதி நிலவினுல் நாடும்—நாட்டு மக்களும் அடையும் நன்மையைப்பற்றி நினைக்க நினைக்க அவர் நெஞ்சம் மகிழ்ந்தது.

அப்புலவர் தன் மனத்தில் எழுந்த எண்ணங்களை அப்படியே அவர்கள் முன்னிலையிலே கொட்டினுர்.

"நீ குளிர்ந்த நீரையுடைய காவிரிக்குத் தலைவன்!

இவனே, அடிமரம் தொலைந்த—பூவாது காய்க்கும் மரமாகிய—ஆலமரத்தின் விழுது போன்றவன். அடிமரம் தொலைந்தாலும் அதன் கிளைகளை அம்மரத்தின் விழுதுகள் தாங்குகின்றன. அதுபோல, இவன் தன் முன்னேரால் காக்கப்பட்ட சுற்றத்தாரை, இவன் முன்னேர் மறைந்தபின், அவர்கள் வருந்தாமல் காப்பாற்றுகின்ருன்; தான் சிறிதாயிருந்தாலும், பாம்பை அதன் கூட்டத்துடன் நடுங்கச்செய்யும் இடி ஏறுபோல இவன் இளைஞனுயினும் தன் பகைவர்க்கு இடம் கொடாத போர்த்திறம் பொருந்திய பாண்டியர் குடியிலே பிறந்தவன்.

"நீ அறம் நிலைத்திருக்கும் உறைபூரில் வாழும் அரசன்!

இவனே, "நெல்லும் நீரும் எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய பொருள்; ஆதலால் அவற்றை அளிப்பதிலே பெருமையில்லை" என்று கருதுகின்றவன். பொதியமலைச்

சந்தனமும், கடல் முத்தும் எல்லோராலும் பெறமுடியாது; ஆதலால் அவற்றைக் கொடுப்பமே சிறந்த கொடையென்று கருதுவோன். வீர முரசு, தியாக முரசு, நீதி முரசு என்னும் மூன்று முரசும் தன் அரண்மனே வாயிலிலே முழங்கும்படி தமிழ் பொருந்திய மதுரையிலிருந்து செங்கோல் நடத்துவோன்.

"வெண்ணிறமுள்ள உருவினனாகிய, பனைக்கொடியை உயர்த்திய பலதேவன்; நீல நிறத்தோனாகிய சக்கராயுதத்தையுடைய திருமால்; என்னும் இரண்டு தெய்வங்களும் ஒன்று சேர்ந்து நின்றாற்போல நீங்கள் காணப்படுகின்றீர்கள். சிறந்த தோற்றத்துடன், காண்போர்க்கு அச்சம் பிறக்கும்படி இந்நிலையில் இருக்கின்றீர்கள். ஆதலின் இதைவிட இனிமையானது வேறு ஒன்றும் இல்லை.

"இன்னும் கேளுங்கள்! உங்கள் புகழ் நீடூழி வாழ்க! ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொண்டு வாழுங்கள்—ஒற்றுமையுடன் என்றும் இவ்வாறே கூடியிருப்பீராயின் — உங்களுக்கு வெற்றியுண்டு. கடல் சூழ்ந்த இவ்வுலகம்—பல செல்வங்களும் பெருகும் இவ்வுலகம்—முழுவதும் உங்கள் கையில்தான் இருக்கும். இது பொய்யாகாது!"

என்று பாடினார் காரிக்கண்ணனார்.

நீயே,
தண்புனல் காவிரிக் கிழவனே;
இவனே,
முழுமுதல் தொலேந்த கோளி ஆலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்இசை முதுகுடி நடுக்கறத் தழீஇ,
இளையது ஆயினும் கிளை அரா எறியும்
அருநரை உருமின் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவர் ஏறே;
நீயே,
அறம்துஞ்சு உறந்தைப் பொருநனே;
இவனே,
நெல்லும் நீரும் எல்லார்க்கு எளியஎன
வரைய சாந்தமும், திரைய முத்தமும்
இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ் கெழுகூடல் தண்கோல் வேந்தே;
பால்நிற உருவின் பனைக்கொடியோனும்

நீல்நிற உருவின் நேமியோனும் என்று
இருபெரும் தெய்வமும் உடன் நின்றாங்கு
உருகெழு தோற்றமோடு உட்குவர விளங்கி
இந்நீர் ஆகலின், இனியவும் உளவோ;
இன்னும் கேண்மின் நும் இசை வாழியவே!
ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்! இருவீரும்
உடன்நிலை திரியீராயின் இமிழ்திரைப்
பௌவம் உடுத்தஇப் பயம்கெழு மாநிலம்
கை அகப்படுவது பொய் ஆகாதே.

இது காரிக்கண்ணனார் பாடலின் முற்பகுதி. இது அரசர்கள் போர் செய்யாமல் ஒன்றுபட்டு வாழ்வதன் நன்மையை உணர்த்திற்று.

## போருக்குத் தடை.

இரு மன்னர்களுக்குள் நடக்க இருந்த போர் ஒன்றை நடக்காமல் தடுத்த நிகழ்ச்சி ஒன்று புறநானூற்றில் காணப்படுகின்றது.

அதியமான் நெடுமான் அஞ்சி சிறந்த வீரன்; கொடை வள்ளல்; ஔவையாரிடம் அன்பு பாராட்டும் தமிழ் அன்பன்; அவனுடைய வீரத்தையும் புகழையும் கேட்டுத் தொண்டைமான் பொறாமை கொண்டான். அதியமானுடன் போர் செய்ய எண்ணினான். அதன்பொருட்டுப் படை வீரர்களையும், படைக் கலன்களையும் பெருக்கி வந்தான்.

இச்செய்தியை அறிந்த அதியமான், ஔவையாரிடம் ஆலோசனை கேட்டான். அவர் போர் மூளாமல் தடுத்துவிடுவதாக உறுதி கூறினார். போர் நிகழ்ந்தால் நாடு நாசமுறும்; ஆதலால் போரைத் தடுக்கவேண்டும்; என்பதே அதியமானுடைய கருத்து. இதை அறிந்த ஔவையார் தொண்டைமானிடம் தூதாகச் சென்றார். அவன் ஔவையாரை வரவேற்றான். அவரைத் தனது படைக்கலச் சாலைக்கு அழைத்துச் சென்றான். தான் சேர்த்துவைத்திருக்கும் படைக் கலகங்களையெல்லாம் அவருக்குக் காட்டினான்.

அப்பொழுது ஔவையார், அதியமானுடைய வீரத்தையும், அவனுக்குள்ள பொதுமக்கள் ஆதரவையும் தொண்டைமானிடம் எடுத்துக் கூறினார். போர் வராமல் தடுத்தார். இது புறநானூற்றில் காணப்படுவது.

(தொடரும்)

# முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்.*

(முற்றெடர்ச்சி துணர் ௩௩. மலர் ௧௧. பக். 356)

செம்பாதியும் இதன் எதிராமாண்டு நாலுகூறிட்ட மூன்று கூறும் இதன் எதிராமாண்டு முதல் இவ்வூர் இறைகட்டின இறை ஆட்டாண்டுதோறும் நின்றி | றையாய்[1] இறுப்பதாகவும் இந் நாட்டு உதயமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம் அளந்தபடி நிலன் நூற்றி | ரண்டே முக்காலே காணி அரைக்காணி முந்திரிகைக் கீழொருமா வரை முந்திரிகைக் கீழரையே இரண்டு மா | விலும் ஊரிருக்கை நத்தமும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்ற மும் இத்தேவர் இறையிலி நந் | தவானமும் இவ்வூர் விஷ்ணுக் கள் ஸ்ரீவைகுந்த முடையார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இத் தேவர் இறையி | லி நந்தவானமும் இவ்வூர் பிடாரி கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் குளமும் கரையும் இவ்வூர் நிலத் | தை யூடறுத்துப்போன கருவாய்க்காலான மும்மடிசோழப் பேராறு மாக நீங்கும் நிலன் ஒன்றரை

யே இரண்டு மாக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழிரண்டு மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா நீக்கி | நிலனறு நூற் றென்றே யாறுமா முக்காணி யரைக்காணி முந்திரிகைக்கீழ் முக் காலே நான்குமாவரைக்கா | ணி முந்திரி கைக்கீழ் நான்கு மாவி னுல் நெல்லு ஐயாயிரக்கலமும் மீன்பாட்டங் காசிரண்டும் | வெண்ணிக்கூற்றத்து பிரமதேயம் ஸ்ரீ பூதிஇந்நாட்டு முதல் தவிர்ந்து இவ்வூர் அளந்தபடி நிலன் அறுநூற் | று நாற்பத் தெட்டே எட்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் மூன்று மாக்காணி அரைக்காணிக் | கீழ் எட்டுமாவிலும் ஊரி ருக்கையும் குளமும் கரையும் ஸ்ரீ கோயில்களும் நந்தவானங்களும் தீண் | டாச்சேரியும் சுடுகாடும் இவ்வூர் நிலத்தாறேபோன கரு வாய்க்காலும் வீரசோழவளநாட்டுக்குப் பாயப் | போன குஞ்சர மல்லப் பெருவாய்க்காலுமாக[2] நீங்கும் நிலன் அஞ்சே எட்டுமா முக்காணி அரைக்கா | ணி முந்திரிகைக் கீழரையே மாகாணி அரைக்காணிக்கீழ் எட்டுமா நீக்கி நிலன் நூற்று நாற்பத்திரண்டே முக்காலே நான்குமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரையே இரண்டு மாவினுல் நெல்லு ஐயா | யிரக்கலமும் மீன் பாட்டங் காசிரண்டரையும் யாண்டு எட்டாவது முதல் ஆட்டா

---

1. நின்றிறை—நிலையான நிலவரி. Permanent Tax. இது 'வாடாக்கடமை' எனவும் சில சாசனங்களில் வழங்குகின்றது.

2 குஞ்சரமல்லன் என்பது முதற் பராந்தக சோழனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று, அவனது ஆட்சியில் வெட்டப்பெற்ற பெருவாய்க்காலாதலின் இப்பெயர் பெற்றது.

* இது, நூலாக வெளிவர இருத்தலின் இவ்விதழோடு நிறுத்தப் பெறும்.

ண்டு தோறும் | நின்றிறையாய் இருப்பதாக இவ்வூர் முன்னுடைய பிராமணர் தங்கள் நிலன் தாங்களே | பெற்றுத்தங்கள் நிலத்தால் வந்த இறை தாங்களே இறுப்பதாக இவ்வூர்கள் வெவ்வே | று முதலும் பழம்பியரும்[1] யாண்டு எட்டாவது முதல் தவிர்ந்து நித்தவிநோத வளநாட்டு வீர | சோழவளநாட்டுப் பிரமதேயம் திரிபுவந மகாதேவி சதுர்வேதி மங்கலத்தோடும்யாண்டு | எட்டாவது முதல் கூடி ஓருராகவும் ஆக இப்படி வரியிலிட்டுக்கொள்கவென்று நாம் சொல் | ல நம் ஓலை எழுதும் ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலை | யூர் நாட்டுப் பாலையூர் கிழவன் அரையன் முடிகொண்ட சோழன் எழுத்தினாலும் நம ஓலை நாயக | ன் உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து நராக்கண் கிருஷ்ணன் | இராமனான இராசேந்திரசோழ பிரம்மாராயனும் உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுச் சாத் | தமங்கலமுடையான் அரையன் இராஜராஜனான விக்கிரமசோழச் சோழிய வரையனும் நித்த விநோ | த வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூருடையான் ஈராயிரவன் பல் | லவயனான உத்தமசோழ பல்லவரையனும் அருமொழிதேவ வளநாட்டு நென்மலிநாட்டு[2] உத்தமசோழ நல்லூருடையான் பாளூர் | அம்பலத்தாடியான முடிகொண்ட சோழ விழுப்பரையனும் ஒப்பினாலும் புக்க நம் தீட்டின்படியே வரியி | லிட்டுக்கொள்கவென்று நம்கருமமாராயும் உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தக |

பக்கம்—உ

சதுர்வேதி மங்கலத்து நராக்கண் மாராயன் ஜனநாதபனான இராசேந்திரசோழ பிரமாதிராஜனும் உய்யக் | கொண்டார் வளநாட்டுப்பேராவூர் நாட்டுக்[3] காஞ்சிவாயில் உடையான் உதையதிவாகரன் தில்லை | யாளியான ராஜராஜ மூவேந்த வேளானும் அருமொழிதேவ வளநாட்டு இங்கணாட்டு இளையான்குடி | யான் ராஜாதித்தன்கூத்தாடியான பரகேசரிவிழுப்பரையனும் நடுவிருக்கும்[4] நித்தவினோத வள | நாட்டுக் கிழார் கூற்றத்துப் புள்ளமங்கலத்துப்[5] பரமேஸ்வர சர்வ கிருத்யாஜியும் உகளூர் கூற்றத் | துத் திட்டைக்குடி மரவடிகள் ஸ்ரீதர ஸ்ரீபட்ட சோமயாஜீயும் சொல்ல

---

1. பழம்பெயரும்.
2. பேராவூர் என்பது தேவாரப்பாடலிற் குறித்த வைப்புத்தலங்களுள் ஒன்று.
3. இங்கு நென்மலி என்றது நெல்வேலி யென்ற பெயரின் மரூஉ. மன்னார்குடி தாலுகாவைச் சேர்ந்த இவ்வூர் இந்நாளில் நெம்மேலியென வழங்குகின்றது.
4. நடுவிருக்கை—அரசாங்கப் பதவிகளிள் ஒன்று, குறித்த செயலொன்றை நிறைவேற்ற வேண்டுமென்று வேந்தன்பால் விண்ணப்பித்தல் இப்பதவியாளர்க்குரிய கடமையாகும்.
5. புள்ளமங்கை, தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று.

# நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் பேரவை, தஞ்சை.

## 14-ஆம் ஆண்டு விழா.

"காவலரும் பூமணமும் காவிரியின் நீரொழுக்குங் கண்டுந் தேனும்
மாவளரும் கனிச்சாறும் மயங்கியெனப் பேசியுரை வரைந்து தேர்ந்த
பாவலரும் புகழதமிழ் பரப்பிநறுந் தொண்டாற்றிப் பதவி சேர்ந்த
நாவலர்வேங் கடசாமி நாட்டாரின் பேரவையின்"

பதினான்காம் ஆண்டுவிழா 23—3—58 ஞாயிறு மாலை கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில் முத்தமிழ் வித்தகர், பண்டித, வித்துவான், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

அதுபோது, பேரவையினர் விழாத் தலைவரவர்களை

"ஆற்றலொடு செயல்புரியும் ஆண்மையறி வூக்கமுய ரண்ணால்! கொள்கை
ஊற்றமிகத் தமிழ்வளர்க்கும் உணர்வமை பேராசிரிய! ஒண்கலைகள்
ஏற்றமிக வளரண்ணா மலையுயர்பல் கலைக்கழகத் தினிமை மேவப்
போற்றுதமிழ்க் கலைத்துறைகள் பொலிவுபெறத் தனித்தலைமை பூண்ட
தோன்றால்!
ஒருமொழியாய் உயர்தனிச்செம் மொழியாகி உலகுபுகழ் ஒளிர நாளும்
வருமொழியாம் தமிழ்மொழியில் மாண்புமிகு பண்டிதனாய் வாழ்ந்த நாட்டார்
பெருமகனின் பேரவையின் பெருவிழவில் ஒருமொழியிற் பேரா சானாய்
வருமகனீ தலைமைகொள வாய்த்தமைகண் டின்புற்றேம் வருக"

என வரவேற்று,

"தண்டமிழிற் றக்கபல நூல்பெருகத் தமிழ்ப்புலவோர் சால்பு மேவ
எண்டிசையும் தமிழ்நெறியின் எழில்பரவ முத்தமிழின் முதன்மை ஓங்கத்
தொண்டியற்றி ஊழிபல தூயபுகழ்ச் செல்வநலன் தோன்ற நாளும்
வண்டமிழ்போல் வாழி"

என வாழ்த்தினர்.

தலைவர் முன்னுரைக்குப் பின்னர், புலவர், திரு. செ. சிங்காரவேற் சேதிராயர் "திருக்குறள்" பற்றியும், சேலம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் புலவர், திரு. க. நடேச உடையார் "முதல் நூல்" என்பது பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு. ஆ. இராமசாமிப் பிள்ளை, M. A., L. T. "ஐயன் அருள் நிலை" என்னும் பொருள் பற்றியும், அறிஞர் திரு. ராய. சொக்கலிங்கம் "கம்பனும் சிவனும்" என்ற தலைப்பின் கீழும் சொற்பொழிவாற்றினர்.

பொழிற்றொண்டர்.